இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைட்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:
# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 03, இதழ்: 235 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 04ஆம் திகதி வியாழக்கிழமை
(18.05.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 27, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

Special offer
2023 மே 1 தொடக்கம் மே 31 வரை
KDK SINCE 1909 JAPAN
DISCOUNT 15% (On selected models only) *Conditions apply
Cash or Card
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# சுதந்திரத் தமிழீழம் வேண்டுமா? வேண்டாமா?

## சுயநிர்ணய உரிமைக்கு பொதுஜன வாக்கெடுப்பே சரியானதென்கிறார் சிவாஜிலிங்கம்

சாவகச்சேரி செய்தியாளர்

சுதந்திரத் தமிழீழம் வேண்டுமா அல்லது வேண்டாமா என்று பொதுஜன வாக்கெடுப்பை நடத்துவதே சரியான சுயநிர்ணய உரிமையாக அமையும் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் யாழ்ப்பாணத்தில் நேற்று (17) இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் தெரிவித்துள்ளார்.

கொடிகாமம் நகரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும் நினைவேந்தல் நிகழ்வும் நேற்று இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சிவாஜிலிங்கம் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

1948ஆம் ஆண்டு இலங்கைத் தீவுக்கு சுதந்திரம் கிடைத்ததில் இருந்து தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களுக்கான உரிமைகளுக்காக மேற்கொண்ட போராட்டங்கள், ஒப்பந்தங்கள்... 02 பக்கம்



# துயரத்தை நினைவேந்த திரளுங்கள்

## தமிழ்க் கட்சிகள் அழைப்பு

ப. கிருபாகரன், கனகராசா சரவணன், சாவகச்சேரி செய்தியாளர்கள்

தமிழினப் படுகொலையை நினைவுகூர்ந்து வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் பொதுமக்களுக்கு நேற்று (17) அழைப்பு விடுத்தன.

மட்டக்களப்பு, கல்லடி கடற்கரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இன்று மாலை 05 மணிக்கு இடம்பெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்குமாறு அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் அழைப்பு விடுத்தார்.

மட்டக்களப்பில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், 02 பக்கம்

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று

நா. தினுஷா




தமிழினப் படுகொலையின் 14ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட தமிழர்கள் வாழும் பகுதிகளிலும் புலம்பெயர் நாடுகளிலும் இன்று (18) நினைவேந்தல் அனுஷ்டிக்கப் படவுள்ளதுடன், இறுதி யுத்தம் இடம்பெற்ற பகுதியான முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் பிரதான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் கடந்த 12ஆம் திகதி முதல் அனுஷ்டிக்கப்பட்டுவரும் நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் கஞ்சி வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், இன்றைய தினம் இனப்படுகொலை நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுவதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், புலனாய்வுத்துறையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

யுத்தம் நிறைவுற்று 14ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று (18) வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. 02 பக்கம்



வடக்கு மாகாண ஆளுநராக திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான், வடமேல் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்று (17) பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

கமெண்ட் கந்தர்...




# ஜனாதிபதி வேட்பாளராக சஜித்துக்கு அங்கீகாரம்

## கட்சியின் செயற்குழுவில் ஏகமனதாக தீர்மானம்



ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை நிறுத்துவதற்கு அக்கட்சியின் செயற்குழு நேற்று முன்தினம் (16) ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

# தீவிரமடையும் கொரோனா

## பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாமைக்கு சுகாதாரப் பரிசோதகர்கள் விசனம்



நாட்டில் தற்போது கொரோனா தொற்று தீவிரமாக பரவி வருவதாகவும் அதுதொடர்பில் முறையான பரிசோதனைகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்நிலைமை தொடர்ந்தால் எதிர்காலத்தில் நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆகவே, தொடர்ந்து சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுமாறும் முகக்கவசத்தை கட்டாயம் அணியுமாறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண குறிப்பிட்டார்.

கொரோனா நிலைமை குறித்து நேற்று (17) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாடு பூராகவும் சந்தேகத்துக்கிடமான கொரோனா நோயாளர்கள் அடையாளம்... 02 பக்கம்

# மக்களின் தேவைகளை பூர்த்திசெய்வதே நோக்கம்

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு



நா.தினுஷா

வடக்கு மக்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார். எனவே, இந்த வாய்ப்பை வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே தனது நோக்கம் என்று... 02 பக்கம்



# விமான நிலையத்தில் வைத்து போதகர் கைதுசெய்யப்படுவார்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்



நா. தினுஷா

நாட்டின் சமய நல்லிணக்கத்துக்கு தீங்கு விளைவித்ததாகக் குறிப்பிடப்படும் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ என்பவர் கடந்த 14ஆம் திகதியே நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் விசாரணைகளுக்கமைய அவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடைக்கான நீதிமன்ற உத்தரவை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய, ஜெரோம் பெர்னாண்டோ மீண்டும் நாடு திரும்பும்போது அவரை விமான நிலையத்தில் வைத்தே கைதுசெய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர்... 02 பக்கம்

# அனைத்து மதங்களினதும் உரிமைகளுக்குப் பாதுகாப்பு

## கிழக்கு ஆளுநர் செந்தில் உறுதி

நா.தினுஷா



கிழக்கு மாகாணத்திலுள்ள சகல சமயங்களினதும் மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று அந்த மாகாணத்தின் புதிய ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (17) இடம்பெற்ற பதவியேற்பு நிகழ்வைத் தொடர்ந்து, செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

02 பக்கம்

# உயர்தர மாணவன் கம்பஹாவில் கைது

## 16 மாணவியரின் நிர்வாணப் படங்களை பெற்றுக்கொண்டதாக குற்றச்சாட்டு

மொடல் அழகிகள் தேவைப்படுவதாக குறிப்பிட்டு வட்ஸ்அப்பினூடாக தகவல் வழங்கி பாடசாலை மாணவியர் 16 பேரின் நிர்வாணப் புகைப்படங்களை பெற்றுக்கொண்ட உயர்தரத்தில் கல்வி கற்கும் 19 வயதான மாணவனொருவர் குற்றவியல் விசாரணைத் திணைக்கள... 02 பக்கம்



கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக பத்தரமுல்லையில் அமைந்துள்ள குடிவரவு - குடியகல்வு திணைக்களத்துக்கு முன்பாக பெருந்திரளானோர் நேற்று (17) காத்திருந்தனர். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)




சப்ரகமுவ மாகாண ஆளுநராக முன்னாள் எம்.பி. நவீன் திசாநாயக்க நியமிக்கப்படும் வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது.

நவீனை அவ்வாறு நியமிப்பதால் ஐக்கிய தேசியக் கட்சியை அங்கு பலப்படுத்தலாம் என்று கருதுகிறாராம் ரணில். ஊவா மாகாண ஆளுநர் பதவியில் முஸம்மில் தொடர்ந்து இருப்பாரென சொல்லப்படுகிறது.

# சம்பிரதாய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பேன்

## வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் கூளுரை



நா.தினுஷா

மாகாண சபையும் உள்ளூராட்சி சபைகளும் செயலிழந்து விட்டன என்பதற்காக மக்களின் தேவைகளை எம்மால் புறக்கணிக்க முடியாது. ஆகவே, வழங்கப்பட்டுள்ள வாய்ப்பைக் கொண்டு மக்களுக்காக சேவையாற்றுவேன். சம்பிரதாய பூர்வமான அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து, மக்களுக்கு சேவையாற்றும் அரசியல் நிலைமையை... 02 பக்கம்

# காவி உடையில் மத போதகர்கள்

## பின்னணியில் குழு இயங்குவதாக ஞானசாரர் குற்றச்சாட்டு

02 பக்கம்

# எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம்

## பிரதிவாதிகளுக்கு எதிராக ரிட் மனு

எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம் தொடர்பில் பிரதிவாதிகள் அறுவருக்கு எதிராக சட்டமா அதிபரால் சிங்கப்பூர் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை மே 15ஆம் திகதி இடம்பெற்றிருந்த நிலையில், அடுத்தகட்ட விசாரணைகள் ஜூன் முதலாம் திகதி இடம்பெறவுள்ளன. 02 பக்கம்

## காவி உடையில்...

கிறிஸ்தவ மதபோதகர் ஜெரோம் பெர்னாண்டோ குறித்து குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளோம். காவி உடையிலும் கிறிஸ்தவ மத போதகர்கள் செயற்படுகிறார்கள் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று (17) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெறும் ஒருசில சமய ரீதியான விடயங்களை அரசியல்வாதிகள் தமது அதிகார தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அவ்வாறு இல்லாவிட்டால் தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக புதிதாக சம்பவங்களை உருவாக்குகிறார்கள்.

கிறிஸ்தவ மத போதகரின் பின்னணியில் வேறுபட்ட குழுவினர் இருப்பதாலேயே அது குறித்து யாரும் உண்மையை வெளியிட மறுக்கிறார்கள்.

பிக்குகளின் மத்தியிலும் காவி உடை அணிந்த கிறிஸ்தவ மத போதகர்கள் இருக்கிறார்கள். ஒரு பிரச்சினை உருவானதும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை தேடிப்பார்ப்பதில்லை என்றார்.

## எக்ஸ்பிரஸ் பேர்ள்...

சிங்கப்பூர் சர்வதேச வணிக நீதிமன்றத்தின் (SICC) சட்டத்திட்டங்களுக்கு அமைவாக அந்த நீதிமன்றத்துக்கு வழக்கு விசாரணைகளை மாற்றிக்கொள்ள சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்பார்த்துள்ளது. இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி அடுத்த கட்ட வழக்கு தாக்கல் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அவற்றை கொண்டு நடத்துவதற்கும் அமைச்சரவை அனுமதியுடன் சிங்கப்பூர் சட்ட நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## உயர்தர மாணவன்...

கணினி குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 16ஆம் திகதி கைதுசெய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த மாணவர் கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொடை பிரதேசத்திலுள்ள முக்கிய பாடசாலையில் கல்விகற்று வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். மினுவாங்கொடை, கம்பஹா மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களிலுள்ள சாதாரணதர மற்றும் உயர்தர மாணவியர்களிடமே இவ்வாறு புகைப்படங்களை பெற்றுக்கொண்டுள்ளார்.

இலத்திரனியல் ஊடகமொன்று குற்றவியல் விசாரணைத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய இதுதொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவத்தில் சந்தேகநபரான பாடசாலை மாணவன் பிரபல்யமான மொடல் அழகிகளின் பெயர்களில் போலி வட்ஸ்அப் கணக்கொன்றை உருவாக்கி மொடல் அழகிகளாக விரும்பும் யுவதிகளுக்கு அதுகுறித்து அறிவித்து அவர்களுடன் தகவல் பரிமாறிக் கொண்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## அனைத்து மதங்களினதும்...

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி, என்னை கிழக்கு மாகாண ஆளுநராக நியமித்துள்ளார். அதற்காக எனது நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, அவரின் நோக்கம் கிழக்கு மாகாணத்தில் முழுமையாக அமுல்படுத்தப்படும்.

கிழக்கு மாகாணத்திலிருக்கும் சகல சமயங்களினதும் அந்த சமயங்களை பின்பற்றும் மக்களதும் உரிமைகள் பாதுகாக்கப்படும். மலையக பிரதேசங்களில் கடந்த காலங்களில் எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தோமோ, அதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் எங்களின் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றார்.

## மக்களின் தேவைகளை...

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் பதவியேற்றப் பின்னர் நேற்று (17) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண ஆளுநர் பதவியை எனக்கு வழங்கியமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறேன். வடக்கு மாகாணத்திலுள்ள சாதாரண பொது மக்களுக்கு சேவையை வழங்க ஜனாதிபதி எங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறார்.

வடக்கு மாகாணத்திலுள்ள மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, இந்த வாய்ப்பினை வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

மிக அவதானத்துடன் அந்த மக்களுக்கு தேவையான விடயங்கள் குறித்து கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி எங்களுக்கு பணிப்புரை விடுத்திருக்கிறார். அந்த மக்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்க தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி எங்களுக்கு உறுதியளித்துள்ளார். இந்தப் பிரதேசத்திலுள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றுமாறும் அதுதொடர்பில் தொடர்ந்து கலந்துரையாடுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் கடமைகளை முறையாக செயற்படுத்த ஆளுநராக நான் கடமைப்பட்டுள்ளேன் என்றார்.

## சுதந்திரத் தமிழீழம்...

மற்றும் அஹிம்சை வழிப் போராட்டங்கள் ஆகியன தோற்கடிக்கப்பட்ட நிலையில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதவழிப் போராட்டமாக உருவெடுத்தது.

இதற்கு முன்னர் மற்றும் பின்னருமாக 1958, 1977 மற்றும் 1983ஆம் ஆண்டுகளில் இனப்படுகொலைகள் இடம்பெற்றன.

இறுதி யுத்தத்தின்போது வடக்கு-கிழக்கு முழுவதும் மிகக் கொடூரமான இனப்படுகொலைகள் இடம்பெற்று அது முள்ளிவாய்க்காலில் முடிவடைந்தது. இனப்படுகொலைகள் முடிவடைந்து 14ஆண்டு அஞ்சலி நிகழ்வை இன்று மேற்கொண்டும் வருகிறோம்.

இந்த நேரத்தில் ஒன்றை சொல்கிறோம்.

சாட்சிகள் இல்லாமல் ஐ.நா. உறுப்பு அமைப்புகள் வெளியேற்றப்பட்டு மிக கடுமையாக நச்சுகுண்டு, விமானக்குண்டு ஆகியன வீசப்பட்டு ஒரு இலட்சத்துக்கும் மேலான அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். மேலும் மூன்று இலட்சம் மக்கள் முட்கம்பி வேலிகளுக்குள் முடக்கப்பட்டும், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் புனர்வாழ்வு நிலையத்துக்குள் அடைக்கப்பட்டும் இருந்தனர்.

அவ்வாறிருந்தும் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை.

போர்க்குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்களில் நிறுத்தி நீதி கிடைக்கப் போராடி வெற்றி பெறுவோம்.

கொல்லப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். வெளிநாட்டிலுள்ள அமைப்புகள், தாய்த் தமிழக அமைப்புகள் மற்றும் தாயக அமைப்புகள் ஒத்த குரலில் சுதந்திரத்துக்கான பொதுஜன வாக்கெடுப்பினை வலியுறுத்த வேண்டும் என்றார்.

## விமான நிலையத்தில்...

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (17) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெரோம் பெர்னாண்டோ என்பவர் தொடர்பில் குற்றவியல் விசாரணை திணைக்களத்துக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதுதொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முறைப்பாடுகளில் கிடைத்த சாட்சி பதிவுகளின் பின்னரே நீதிமன்ற உத்தரவை பெற்றுக்கொண்டோம்.

இவர் கடந்த 14ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். இருந்தபோதும், அவர் மீதான வெளிநாட்டுப் பயணத்தடைக்கான நீதிமன்ற உத்தரவை 16ஆம் திகதியே நாங்கள் பெற்றுக்கொண்டோம். இவ்வாறு பிரயாணத் தடை உத்தரவை பெற்றுக்கொண்டால் குறித்த நபர் சம்பந்தப்பட்ட நாட்டிலிருந்து வெளியேற முடியாது. வேறு நாடுகளுக்கு சென்று அங்கு உள்நுழையவும் இடமளிக்க முடியாது. இவ்விரு சந்தர்ப்பங்களிலும் சம்பந்தப்பட்ட நபர் கைது செய்யப்பட வேண்டும்.

முறைப்பாடு கிடைத்ததன் பின்னர் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது. வெளிநாட்டு பயணத் தடையை பெற்றுக்கொள்வதாயின் நீதிமன்றத்துக்கு சாட்சிகளை முன்வைக்க வேண்டும். முறைப்பாடு கிடைத்ததன் பின்னர் விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றத்தில் உத்தரவை பெற்றுக்கொள்ள சிறிது காலம் தேவைப்படும். அதற்கமையவே இந்த தடை உத்தரவை பெற்றுக்கொண்டோம்.

இவர் தொடர்பான முறைப்பாடு கிடைத்து ஓரிரு தினங்களே ஆகின்றன. இவர் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளாரா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னரே நிதி மோசடி தொடர்பில் குறிப்பிட முடியும்.

விசாரணைகளின்போது இவர் மீதான குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்பட்டால், நீதிமன்ற உத்தரவுடன் சர்வதேச பொலிஸார் அல்லது சர்வதேச சட்டத்திட்டங்களினூடாக அவரை கைதுசெய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. விசாரணைகளை பொறுத்தே அதனை தீர்மானிக்க வேண்டும்.

வெளிநாட்டுப் பயணத்தடைக்கான உத்தரவு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், விமான நிலையத்தில் வைத்தே அவரை கைதுசெய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்றார்.

## தீவிரமடையும் கொரோனா...

காணப்பட்டு வருகின்றனர். அதேபோன்று, ஓரிரு கொரோனா மரணங்களை உறுதிப்படுத்தி அரசாங்க தகவல் திணைக்களமும் ஊடக வெளியீடுகளை முன்வைத்து வருகின்றது.

மேலும், பொதுவாக சந்தேகத்துக்கிடமான கொரோனா மரணங்களும் பதிவாகின்றன. எது எவ்வாறாயினும் இந்த நிலைமையின் மத்தியில் சமூகத்தின் அடிமட்டத்தில் ஏனைய தொற்று நோய்களை போன்று சந்தேகத்துக்கிடமான கொரோனா நோயாளர்களும் பதிவாகி வருகிறார்கள்.

குறிப்பாக பாடசாலைகள் உள்ளிட்ட நிறுவனங்களில் இந்த தொற்றுப் பரவல் பரவலடைந்துள்ளது. எனவே மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். கொரோனா கட்டுப்பாட்டுக்காக இதற்கு முன்னர் சுகாதார பிரிவினரால் அறிமுகப்படுத்தப்பட்ட சுகாதார ஆலோசனைகளை பின்பற்ற வேண்டும். அதிக சன நெரிசல் கொண்ட இடங்களில் நடமாடுவது தவிர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அதேபோன்று மீண்டும் முகக்கவசம் அணிவது அவசியமாகும். அதனூடாக தமது உயிரையும் ஏனையவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும். சமூகத்தில் அடிமட்டத்தில் கொரோனா மரணங்கள் பதிவாகின்றனவா, புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்படுகிறார்களா என்பது தொடர்பில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதில்லை.

வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் மற்றும் உயிரிழக்கும் நபர்களில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளிலேயே கொரோனா தொற்று உறுதி செய்யப்படுகிறது. அடிமட்டத்தில் கொரோனா தொற்று பரவலடைந்துள்ளது என்று நாங்கள் சந்தேகிக்கிறோம்.

தற்போது அடையாளங் காணப்படும் கொரோனா நோயாளர்களை அடிப்படையாகக் கொண்டு, அடிமட்டத்தில் கொரோனா தொற்று பரவலடைந்துள்ளதா என்பது குறித்து பரிசோதனைகள் இடம்பெறுவதில்லை. அதனால், தற்போது அடையாளம் காணப்படும் சந்தேகத்துக்கிடமான நோயாளர்கள் மத்தியில் கொரோனா நோயாளர்களாக இருந்தால் நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்றார்.

## ஜனாதிபதி வேட்பாளராக...

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியை கட்டியெழுப்ப தாம் செயற்படுவதாகவும் இதற்குத் தேவையான உள்ளக மற்றும் வெளியக ரீதியான பொறுப்புகளை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச செயற்குழுவில் தெரிவித்தார்.

குறித்த கூட்டணியை கட்டியெழுப்பும் போது, ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கை மற்றும் வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் தரப்புகளுடன் உரிய கூட்டணி கட்டியெழுப்பப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

ஒழுக்காற்றை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் பணிக்கப்பட்டனர்.

இதேவேளை, இந்த செயற்குழுக் கூட்டத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவும் கலந்து கொண்டதோடு, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு நம்பகமான தலைவர் வேறு எவரும் இல்லை எனவும் நம்பகமான தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மாத்திரமே எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியில் சஜித் பிரேமதாசவே போட்டியிட வேண்டும் என சுஜீவ சேனசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா ஆகியோர் முன்மொழிந்ததோடு, இதற்கு செயற்குழு ஏகமனதாக ஒப்புதல் அளித்தது.

சமிந்த விஜேசிறி, எஸ்.எம்.மரிக்கார், ரெஹான் ஜயவிக்ரம, ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய உள்ளிட்டவர்கள் கருத்துத் தெரிவித்து இந்தப் பிரேரணைக்கு தமது பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

## சம்பிரதாய அரசியலுக்கு...

உருவாக்க வேண்டும் என்று வடமேல் மாகாணத்தின் புதிய ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஆளுநராக பதவியேற்றப் பின்னர் நேற்று (17) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி வடமேல் மாகாணத்துக்கான ஆளுநராக என்னை நியமித்துள்ளார். மாகாண சபையும் உள்ளூராட்சி மன்றங்களும் செயற்பாட்டில் இல்லாததால் அவற்றின் முழுமையான பொறுப்புகளையும் ஆளுநர் அலுவலகமும் ஆளுநருமே ஏற்கவேண்டும். அதற்கமைய, மாகாண சபையின் கடமைகளையும் பிரதேச சபைக்குரிய கடமைகளையும் நிறைவேற்ற நான் கடமைப்பட்டுள்ளேன். இவ்விரு நிறுவனங்களுக்கும் மக்கள் பிரதிநிதிகள் நியமிக்கப்படும் வரை மக்களுக்கான சேவையை முறையாக பெற்றுக்கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்படுமாறே ஜனாதிபதி எம்மிடம் கோரினார்.

வடமேல் மாகாணத்திலுள்ள மக்கள், யானை தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை சந்தித்துள்ளார்கள். இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமென்றால் மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் சுமுகமான தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அதனை என்னால் செய்யமுடியும் என்று முழுமையாக நம்புகிறேன்.

மாகாண சபையும் உள்ளூராட்சி சபைகளும் செயலிழந்துவிட்டன என்பதற்காக மக்களின் தேவைகளை எம்மால் புறக்கணிக்க முடியாது. சம்பிரதாயபூர்வமான அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து, மக்களுக்கு சேவையாற்றும் அரசியல் நிலைமையை உருவாக்க வேண்டும். அரசியல்வாதிகள் தமக்கு கிடைத்த அதிகாரத்தை முறையாக பின்பற்ற வேண்டும். தென்மாகாணத்தை விட இந்தப் பிரதேசத்தில் என்னால் சிறப்பாக கடமையாற்ற முடியும் என்று கருதுகிறேன் என்றார்.

## முள்ளிவாய்க்கால்...

மேலும், புதுக்குடியிருப்பு பகுதியில் கஞ்சி வழங்கும் மாபெரும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி துக்க தினமாக அனுஷ்டிக்க வர்த்தகர்கள் திட்டமிட்டுள்ளனர்.

மேலும், கடந்த 12ஆம் திகதி முள்ளிவாய்க்கால் கப்பலடி கடற்கரைப் பகுதியிலிருந்து ஆரம்பமான நினைவு ஊர்தி பவனி இன்று முள்ளிவாய்க்கால் பிரதேசத்தைச் சென்றடையவுள்ளது.

இந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தினத்தை மிகுந்த பயபக்தியுடனும் இருதய சுத்தியுடனும் கடைப்பிடித்து வருவதாகத் தெரிவித்த வர்த்தகர்கள், சகல வர்த்தக நிலையங்களையும் மூடி மக்களுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் முற்றத்துக்கு சென்று அஞ்சலி செலுத்தவுள்ளதாக தெரிவித்தனர்.

மேலும், இன்றைய தினம் பிதிர்க்கடன் எனக் கூறப்படும் நீத்தார் சடங்கை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. போர்க்காலத்தில் உயிர் நீத்தவர்களின் உறவுகள், அவர்களை நினைவுகூர்ந்து பிதிர்க்கடன் செய்வதற்காக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும் இடத்திலிருந்து கடற்கரையை நோக்கிச் செல்கின்ற கப்பல் வீதியில் உயிர்நீத்தவர்களுக்கு சடங்குகளை நடத்துவதற்கான மண்டப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, அனைவரும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளப்படவுள்ளதாகவும் இந்த நிகழ்வுகள் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலினால் கற்றுக்கொண்ட பாடங்களையும் அனுபவங்களையும் அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லவேண்டும். ஆனால், அந்த அனுபவங்களை அடுத்த சந்ததியினருக்கு வழங்க நாங்கள் தயாராக இல்லை என்றும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அரசியல் மேடையாக்க முயற்சிக்க வேண்டாம் என்றும் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு பகுதியில் கடந்த 12ஆம் திகதி நினைவு ஊர்தி பவனி ஆரம்பமாகியிருந்தது. வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் கஞ்சி காய்ச்சி வழங்குவது, இன அழிப்பின் வாகனப் பேரணி என்பன பல்கலைக்கழக மாணவர்கள், கட்சிகள், பொது அமைப்புகளால் முன்னெடுக்கப்படுகிறது.

இதேவேளை, கொழும்பு, பொரளை கனத்தை சுற்றுவட்டத்தில் இன்றுகாலை 10.30 மணிக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துயரத்தை நினைவேந்த...

கொரோனா தொற்று காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக நினைவேந்தலை பாரியளவில் செய்வதற்கு முடியாத சூழ்நிலை காணப்பட்டது. இந்த முறை கல்லடி கடற்கரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு, அம்பாறை பிராந்தியம் சார்பாக நினைவேந்தல் நிகழ்வை நாளை (இன்று) மாலை 5.00 மணிக்கு செய்வதற்காக நாங்கள் சகல ஏற்பாடுகளையும் செய்திருக்கின்றோம்.

இந்த நினைவுகூரல் நிகழ்வில் இன, மத, சமய வேறுபாடுகளின்றி நாங்கள் ஒரு உணர்வு பூர்வமான மனிதனாக தமிழ்ப் பேசுபவனாக தமிழினத்துக்காக, தமிழினத்தின் உரிமைக்காகப் போராடிய இனமாக நாங்கள் இதனை நினைவுகூருவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். நாளை பிற்பகல் ஐந்து மணிக்கு கல்லடி கடற்கரைக்கு ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டித்துவரும் இந்நிலையில், இலங்கை அரசு தன்னுடைய போர் வெற்றியினை கொண்டாடிக் கொண்டு வருகின்றது. தற்போதைய சூழ்நிலையில் அவர்கள் இந்த போர் வெற்றியினை பிரமாண்டமாக இல்லாவிட்டாலும் கொண்டாடிக் கொண்டு வருகின்றனர்.

நாங்கள் 2009 மே 18 ஐ ஒட்டிய காலப் பகுதியில் கிட்டத்தட்ட 140,000 பொதுமக்களை இழந்திருந்ததாக மன்னாரில் ஆயராக இருந்த இராயப்பு யோசப் ஆண்டகை வழங்கியிருந்தார்.

இந்தப் போர் தொடங்கிய காலம் இருந்து கிட்டத்தட்ட 3இலட்சம் மக்களும் போராளிகளும் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அதிலே பல தலைவர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றார்கள். இருந்தாலும் இந்த முள்ளிவாய்க்கால் வாரத்தினை நாங்கள் வருடாவருடம் நினைவுகூர்ந்து வருகின்றோம். இந்த முறையும் அந்த வகையிலே நினைவுகூரல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சிங்களப் பேரினவாதிகள், இனவாதிகள் குறிப்பாக சரத் வீரசேகர போன்றவர்கள் இதற்கு எதிரான கருத்துகளை கூறிக் கொண்டிருக்கின்றார்கள். நேற்றைக்கு முன்தினம் கூட நினைவு தினத்தினையொட்டி நடைபெற்ற ஊர்திப் பவனி, விளக்கேற்றல்கள், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடுகள் போன்றவை எதற்காக என்ற கேள்வியை எழுப்பியிருந்தார்.

உண்மையிலேயே எங்களது மக்கள் எங்களுக்காக உயிர்நீத்தவர்களை நினைவுகூர வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கின்றது. அந்தவகையில் நாங்களும் ஒவ்வொரு வருடமும் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே இந்தத் தினத்தில் அவர்களை நினைவுகூர்ந்து கொண்டிருக்கின்றோம்.

கடந்த இரண்டு வருடங்களாக பெரும் தொற்று காரணமாக அதனை அலுவலகங்களிலும் செய்திருந்தாலும் வழமையாக கல்லடிக் கடற்கரையிலே நாங்கள் இந்த நினைவுகூரலைச் செய்வது வழமை. இந்த முறை நாளையதினம் கல்லடி கடற்கரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு, அம்பாறை பிராந்தியம் இந்த நினைவுகூரலை நாளை பிற்பகல் 5.00 மணிக்கு செய்வதற்காக நாங்கள் சகல ஏற்பாடுகளையும் செய்திருக்கின்றோம்.

இந்த நினைவுகூரல் நிகழ்வில் இன, மத, சமய வேறுபாடுகளின்றி நாங்கள் ஒரு உணர்வுபூர்வமான மனிதனாக தமிழ்ப் பேசுபவனாக தமிழினத்துக்காக, தமிழினத்தின் உரிமைக்காகப் போராடிய இனமாக நாங்கள் இதனை நினைவுகூருவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். நாளை (இன்று) பிற்பகல் ஐந்து மணிக்கு கல்லடி கடற்கரைக்கு ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முள்ளிவாய்க்கால் மே 18 தமிழினப் படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்கள், வங்கிகள், சந்தைகள், தனியார் கல்வி நிலையங் கள், உயர்க்கல்வி நிறுவனங்கள் அனைத்தினதும் அன்றாடச் செயற்பாடுகளை நிறுத்தி நினைவேந்தல் நிகழ்வில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள்மீது மேற்கொண்ட இனவழிப்பு யுத்தத்தின்மூலம் தமிழ் மக்களுடைய உரிமைக்கான ஆயுதப் போராட்டம் கடந்த 2009 மே 18ஆம் திகதி மௌனிக்கச் செய்யப்பட்டது. இந்த இனவழிப்பு யுத்தத்தின்போது சுமார் 150,000 வரையான தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா ஆயுதப் படைகளால் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

1987ஆம் ஆண்டு, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்துக்கான வரைபு 1987இல் இலங்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோது, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் 13ஆம் திருத்தச் சட்ட வரைபில் உள்ளடக்கப்பட்ட விடயங்களைத் தீர்வுக்கான ஆரம்பப்புள்ளியாகக் கூட கருத முடியாது என்பதனைச் சுட்டிக்காட்டி அதனை சட்டமாக நிறைவேற்ற அனுமதிக்க வேண்டாம் என்றுகோரி தமிழ்த் தலைவர்களால் அன்றைய இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதப்பட்டது. எனினும் அக்கோரிக்கையை முற்றாகப் புறந்தள்ளி தீர்வு என்ற பெயரில் தமிழ் மக்களது விருப்புக்கு மாறாகத் தமிழ் மக்கள்மீது திணிக்கப்பட்ட 13ஆம் திருத்தத்தையும் ஒற்றையாட்சியையும் நிராகரித்து, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட தீர்வு வேண்டும் என்ற நிலைப்பாட்டை முன்வைத்துப் போராடியமையினாலேயே தமிழ் மக்கள் இனவழிப்புச் செய்யப்பட்டிருந்தார்கள். தமிழ்த் தரப்பின் கோரிக்கைகளை முற்றாகப் புறக்கணித்து 1987 நவம்பர் 14இல் பாராளுமன்றத்தில் 13ஆம் திருத்தமானது சட்டமூலமாக நிறைவேற்றப்பட்டு முழுமையாக நடைமுறையில் உள்ளபோதே மேற்படி இனவழிப்பு அரங்கேற்றப்பட்டது.

உரிமைக்காகப் போராடியமைக்காக இவ்வாறு இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூரவேண்டிய வரலாற்றுக்கடமை அனைத்துத் தமிழ் மக்களுக்கும் உண்டு. அத்துடன் அவர்கள் எத்தகைய அரசியல் நிலைப்பாட்டை முன்வைத்து போராடினார்கள் என்பதும் அக்கோரிக்கைகளை இறுதிவரை கைவிட மறுத்து உறுதியாக நின்றமையினாலுமே இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்ற வரலாற்று உண்மைகள் எமது அடுத்த சந்ததிக்குக் கடத்திச் செல்லப்படல் வேண்டும். அதனூடாக இனப்படுகொலைக்குச் சர்வதேச குற்றவியில் விசாரணையை வலியுறுத்துவதுடன், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வுகளை நிராகரித்துத் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட தீர்வை நோக்கி மக்களை அணிதிரட்டிச் செல்வதும் அவசியக் கடமையாகும்.

அவ்வாறு இனவழிப்பு அரங்கேற்றப்பட்டு 14 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் தமிழ் மக்கள் 13ஆம் திருத்தத்தையும் ஒற்றையாட்சியையும் நிராகரித்து, தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டித் தீர்வை வலியுறுத்தியே ஜனநாயக வழிமுறையிலான தேர்தல்கள்மூலம் ஆணை வழங்கி வந்துள்ளனர்.

நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து கடந்த 36 ஆண்டுகள் முழுமையாக நடைமுறையில் உள்ள 13ஆம் திருத்தச் சட்டத்தினை, நடைமுறையில் இல்லாதது போன்று பாசாங்கு செய்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கோருவதானது, அதனைத் தீர்வாக ஏற்றுக் கொள்வதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடாகும். கடந்த 75 வருடங்களாகத் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டுவந்த ஒற்றையாட்சி அரசியல் யாப்பினை 13ஐ நடைமுறைப்படுத்தல் என்னும் பெயரில் பாராளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடுவதற்கும் அதனை வடக்கு, கிழக்குத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்து அதற்கு அங்கீகாரம் வழங்குவதற்குமான திரைமறைவுச் சதிகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. இத்தகைய செயற்பாடுகள் முள்ளிவாய்க்கால் வரை நடந்தேறிய தியாகங்களுக்குச் செய்யப்படும் துரோகமாகும். 1987 இல் தமிழ் மக்களின் சம்மதமின்றி ஒருதலைப்பட்சமாகத் திணிக்கப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தை நிராகரித்து, 2009 வரை மேற்கொள்ளப்பட்டிருந்த தியாகம் நிறைந்த உன்னதமான விடுதலைப் போராட்டத்தைத் தவறானதாக சித்தரிக்க முயலும் செயற்பாடுமாகும்.

இச் சதியை மக்களுக்கு அம்பலப்படுத்தி, ஒற்றையாட்சியை நிராகரித்து, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தீர்வை வலியுறுத்தி மக்களை அணிதிரட்ட வேண்டிய வரலாற்றுக் கடமை முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுக்கும் ஒவ்வொரு தரப்பினருக்கும் உண்டு.

கீழ்வரும் கோரிக்கைகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் வழமைபோன்று இவ்வாண்டும் மே 18 அன்று முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் அணிதிரளவேண்டுமென அன்புடன் வேண்டுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திலீபனின் நினைவுத்தூபிக்கு முன்னால் கஞ்சி வழங்கல்





முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தை முன்னிட்டு தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் நேற்று தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபிக்கு முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதன்போது மக்கள் மிகவும் உணர்வுபூர்வமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியை அருந்திச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஆதரவாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# பிராந்திய தேவைகளில் இணைந்து செயற்படும் நம்பிக்கை பிறந்துள்ளது

## ஆளுநர்களுக்கு ரிஷாட் எம்.பி. வாழ்த்து




பிராந்திய நலன்களிலும் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் நோக்குகளிலும் இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புதிய ஆளுநர்களை வாழ்த்தி அவர் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புதிய ஆளுநர்களான திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் சிறுபான்மை சமூகங்களின் பூர்வீகத்திலுள்ளவர்கள். இதனால், எமது மக்களின் அபிலாஷைகள் பற்றி புதிதாக இவர்களுக்கு எதையும் சொல்ல வேண்டியதும் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அன்றாட மற்றும் அடிப்படை பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது. இவற்றில், போரின் வடுக்களால் ஏற்பட்ட தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். இடப்பெயர்வு, மீள்குடியமர்தல், காணிகளின் உரித்துகளைப் பெறுதல், வாக்குரிமை மற்றும் சுயத்தொழில் ஊக்குவிப்பு ஆகிய திட்டங்களில் ஆளுநர்களுடன் இணைந்து செயற்படலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆளுநர்கள் மூவர் பதவிப்பிரமாணம்



வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்று(17) பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

வடக்கு மாகாண ஆளுநராக திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸும் கிழக்கு மாகாண ஆளுநராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானும் வடமேல் மாகாண ஆளுநராக முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# நாகர்கோவிலில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அஞ்சலி



நாகர்கோவிலில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நினைவேந்தல் நிகழ்வு நாகர்கோவில் மகா வித்தியாலயம் முன்பாக இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னணியின் மகளிர் அணி தலைவி வாசுகி சுதாகரன் உட்பட்ட முன்னணி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



**ஈழத்தில் தமிழர்களின் மண்ணுக்காக உயிர்நீத்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 2023ஆம் ஆண்டின் தியாகிகள் தினம் தம்பிலுவில் பிரதேசத்தில் நேற்று முன்தினம் அனைத்து தமிழ் கட்சிகளின் தோழர்களின் ஒன்றிணைப்புடன் இடம்பெற்றது. இதன்போது உயிர்நீத்த தலைவர் மற்றும் போராளிகளுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (தம்பிலுவில்)**



***தமிழினப் படுகொலைக்கு நீதிகோரிய வாகனப் பேரணிக்கு கிளிநொச்சியில் பொதுமக்கள் நேற்று சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.***

# மாந்தைப் பிரதேசத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

***(மன்னார் நகர் நிருபர்)***

தமிழினப் படுகொலை வாரத்தை முன்னிட்டு இனப் படுகொலைக்கு நீதி கோரியும் முள்ளிவாய்க்கால் நினைவுகளை சுமந்தும் தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழினப் படுகொலை குறித்து பல்வேறு நினைவேந்தல்கள் இடம்பெற்றுவரும் நிலையில் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் நேற்று (17) முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.



இந்நிலையில், மன்னார் மாவட்டத்தில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு அடம்பன் பகுதியில் தமிழினப் படுகொலை அஞ்சலி நிகழ்வுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

அஞ்சலி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதிகளில் தமிழினப் படுகொலை நினைவு நாள் மே-18 எனும் தொனிப்பொருளில் பதாகை காட்சிப்படுத்தப்பட்டு, வெள்ளைக்கொடி மற்றும் வெள்ளை நிற தோரணங்கள் பறக்கவிடப்பட்டுள்ளன.



குறித்த நினைவேந்தல் மற்றும் கஞ்சி வழங்கும் நிகழ்வில் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் மெசிடோ நிறுவன பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்



***(மன்னார் நகர் நிருபர்)***

தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளை ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று (17) புதன்கிழமை 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது பொதுமக்கள், வர்த்தகர்கள், சாரதிகள் உட்பட அனைவருக்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், தமிழரசுக் கட்சியின் நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். அதேநேரம் மன்னார் தோட்டவெளி பகுதியிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு தோட்டவெளி பகுதி மக்களால் ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்றது. அருட்தந்தைகள், பொதுமக்கள் உட்பட பலரும் இணைந்து உணர்வுபூர்வமாக குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 04ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்** — போட்டிப் பந்தயங்களில் வெற்றி வாகை சூடுவீர்கள். திடீர் தன வரவால் மகிழ்ச்சி நிலவும்.

**ரிஷபம்** — சுப விரயங்களால் பணத்தட்டுப்பாடு ஏற்படலாம். உடல் நலத்தில் அக்கறை காட்டுங்கள்.

**மிதுனம்** — தர்ம சிந்தனையுடன் செயலாற்றுவீர்கள். நினைத்தது நடக்கும். அனைத்து வித இலாபங்களையும் அடைவீர்கள்.

**கடகம்** — தொழில் மற்றும் வியாபாரத் துறையில் சாதனை படைக்கும் நாள். முன்னெச்சரிக்கையோடு செயல்படுவீர்கள்.

**சிம்மம்** — எதிர்கால நன்மை கருதி திட்டங்களை தீட்டி முடிவுகளை எடுப்பீர்கள். தந்தைவழி நன்மைகள் உண்டு.

**கன்னி** — மௌனம் காத்து ஆலய வழிபாடு செய்வதால் மன நிம்மதி உண்டு. தூரப்பயணங்கள் வேண்டாம்.

**துலாம்** — பெண்களால் அதிர்ஷ்டங்களும் உதவிகளும் உண்டு. காதலில் மூழ்கிப்போய் இருப்பீர்கள்.

**விருச்சிகம்** — உடல் மற்றும் மனம் ஒருங்கே பாதிப்படையலாம். உங்கள் எதிரியின் கை ஓங்கும் எனவே எச்சரிக்கை வேண்டும்.

**தனுசு** — அதிர்ஷ்டகரமான பல நல்ல அனுபவங்கள் நிறைந்த நாள். தெளிந்த மனதுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

**மகரம்** — நண்பர்கள் மூலம் நீங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீடு, வாகன இலாபங்கள் அமையும்.

**கும்பம்** — சமயோசிதமான புத்தியால் அனைத்தையும் சாதிப்பீர்கள். அவசிய செலவுகளை செய்வீர்கள்.

**மீனம்** — பேச்சினால் பிழைப்பவர்களுக்கு புகழ், கௌரவம் உண்டு. அரச வகையில் நன்மைகள் உண்டு.

**திதி** : சதுர்தசி பி.ப.9.43 வரை பின் அமாவாசை

**நட்சத்திரம்** : அஸ்வினி மு.ப.7.22 வரை பின் பரணி

**யோகம்** : அமிர்த யோகம் மு.ப.7.22 வரை பின் சித்தம்.

**வார சூலை** : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப.10.53 - 11.53 மணி வரை

**ராகு காலம்** : 1.23 - 2.53 மணிவரை

**எமகண்டம்** : 5.53 - 7.23 மணிவரை

**குளிகை** : 8.53 - 10.23 மணிவரை

**சந்திராஷ்டமம்** : கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** : அஸ்வினி, மகம், மூலம் (பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்** :-----

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**


# வெற்றி நிச்சயம்



**"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.**

**உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/ Srimath Suwamiji/**






# நீங்கள அனிமேஷன் திரைப்படம்

## ஒன்றை உருவாக்க விரும்புகிறீர்களா?

பரிணமித்து வரும் அனிமேஷன் துறையில் நீங்களும் சிறந்து விளங்க விரும்பினால் இப்போதே

**Mogo Studios இல**

இணைந்து கொள்ளுங்கள்!

**பின்வருவனவற்றுக்கு விண்ணப்பியுங்கள்:**

**Character Rigging Artists**
**3D Generalists**
**Character Animators**

உங்கள் விபரங்களை reach@mogo.lk ஊடாக அனுப்பி விண்ணப்பியுங்கள்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, மே 18ஆம் திகதி, வியாழக்கிழமை

# முள்ளிவாய்க்காலும் தமிழர்களும்!

தமிழர் வரலாறில் மறக்க முடியாத இடம் முள்ளிவாய்க்கால். மறக்க முடியாத திகதி இன்றைய நாள் என்பது எவருக்கும் கூறவே தேவையில்லை.

முள்ளிவாய்க்கால் நினைவு நாள் என்பது ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இறந்தவர்களை நினைவு கூரும் நாள். இது ஈழத் தமிழராலும், உலகத் தமிழராலும் ஆண்டு தோறும் மே 18ஆம் நாள் நினைவு கூரப்படுகின்றது. 2009ஆம் ஆண்டில் இந்நாளிலேயே இலங்கையின் வடக்கு - கிழக்குக் கரையில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் எனும் கிராமத்தில் ஈழப்போர் முடிவுற்றது.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியைத் தமிழீழம் என்ற பெயரில் தனிநாடு அமைக்கக் கோரி 1983 முதல் 2009 வரை தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட ஈழ இயக்கங்கள் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டன. 2007 வரை ஈழப்போரில் குறைந்தது 70,000 பேர் உயிரிழந்தனர். 2008இன் இறுதிப் பகுதியிலும், 2009 ஆரம்பத்திலும், ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கைப் படைத்துறையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே கடும் போர் நடைபெற்றது. இரு தரப்புக்குமிடையே ஏறத்தாழ 300,000 பொதுமக்கள் அகப்பட்டனர். 2009 மே 18 விடுதலைப் புலிகளின் தலைவரைத் தாம் கொன்று விட்டதாக இலங்கை அரசு அறிவித்ததையடுத்து போர் முடிவுக்கு வந்தது.

போரின் இறுதிக் கட்டத்தில் ஏறத்தாழ 40,000 பொதுமக்கள் வரை இறந்தனர் என ஐக்கிய நாடுகளின் அறிக்கை தெரிவித்தது. ஆனால், இந்த எண்ணிக்கை இலட்சங்களில் இருக்கலாம் என்பது தமிழர்களின் நிலைப்பாடு. இவர்களில் பெரும்பாலானோர் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாடற்ற ஏவுகணைத் தாக்குதல்களில் அகப்பட்டு இறந்தனர் என அவ்வறிக்கை தெரிவித்தது. இரு தரப்பினரும் போர்க்குற்றங்கள் இழைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம், இலங்கை அரசு இழைத்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களை தற்போது விசாரணைக்குட்படுத்தியுள்ளது. உலகின் பிரதான நாடான அமெரிக்கா, இலங்கையில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டார்கள் என்று கூறி மூத்த படை அதிகாரிகளுக்குப் பயணத்தடையும் விதித்துள்ளது.

இலங்கை அரசு மே 18ஆம் நாளை போர் வெற்றி நாளாக அறிவித்து இராணுவ அணிவகுப்புகளுடன் ஆண்டுதோறும் கொண்டாடி வந்தது. போரில் இறந்த இலங்கைப் படைத்துறையினர் வெற்றி வீரர்களாக அறிவிக்கப்பட்டு இந்நாளில் இலங்கையின் ஏனைய பகுதிகளில் நினைவுகூரப்பட்டு வருகின்றனர். ஆனாலும், இலங்கை அரசு அமைத்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போரில் இறந்த அனைவரும் பெப்ரவரி 4இல் நினைவுகூரப்பட வேண்டும் எனப் பரிந்துரைத்தும், அரசு அக்கோரிக்கையை நிறைவேற்றவில்லை. பதிலாக, இலங்கைத் தமிழர் இறந்த தமது உறவுகளை நினைவு கூர இலங்கை அரசு தடை விதித்தது. மே 18ஐ ஒட்டிய நாட்களில், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, மக்களின் அஞ்சலி நிகழ்வுகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

தமிழர்கள் நிகழ்த்தும் எந்த நினைவுகூரலையும் இராணுவமும் இலங்கை அரசும் மக்கள் விடுதலைப்புலிகளை நினைவுகூருவதாகவே கருதுகிறது. பொதுமக்கள் தமது வீடுகளில் இறந்த விடுதலைப்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தலாம் என ஆட்சியாளர்கள் கூறியிருந்தாலும், வீடுகளில் புகுந்து இராணுவத்தினர் இந்நிகழ்வுகளைத் தடுத்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

பாதுகாப்பு அச்சுறுத்தல்களின் மத்தியிலும் மே 18ஆம் நாளிலும் அதற்கண்மைய நாட்களிலும் இலங்கைத் தமிழர் சிறிய அளவில் முள்ளிவாய்க்கால் நினைவு நாளை இறந்த உறவுகளை நினைத்து நினைவு கூர்ந்து வருகின்றனர். ஆனாலும், பொது இடங்களில் நடத்தப்படும் நிகழ்வுகளுக்கு பாதுகாப்புப் படையினரால் கெடுபிடிகள் விதிக்கப்படுகின்றன.

விடுதலைப்புலிகள்தான் அரசியல் தீர்வு அல்லது தமிழரின் பிரச்சினைகள் தீர முட்டுக்கட்டையாக இருக்கின்றனர் என்றும் அவர்களை ஒழித்தால் தமிழர் பிரச்சினைகளை தீர்த்துவிடலாம் என்றும் அப்போது கூறிய ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்சினை தீர இதுவரை எதனையும் செய்யவில்லை. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் வந்த எந்த ஆட்சியாளர்களும் இதில் அக்கறை காட்டவுமில்லை. இப்போது தமிழ்ப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட பிரதான விடயங்களில் அக்கறை காட்டாமல் சர்வதேச சமூகத்தின் முன் பாசாங்கு செய்வதைக் காண முடிகிறது.

தமிழ் மக்கள் இந்நாட்டின் பிரஜைகள். அவர்களும் அனைத்து உரிமைகளுக்கு உரித்தானவர்கள் என்று சாதாரண சிங்களச்சனம் நினைக்கும்வரை இந்தப் பிரச்சினை தீரப்போவதில்லை. ஆனால், அவர்கள் அப்படி நினைக்கும் வாய்ப்பு மிகவும் அரிது. கடந்த வருடம் இந்த நாட்களில் எரிபொருளுக்காகவும், உணவுகளுக்காகவும் வரிசையில் நின்றபோது இந்த இனவாதம், மதவாதம் போன்றவை இல்லாமல் சிறுபான்மை சமூகங்களோடு ஒன்றித்து அரசுக்கெதிரான போராட்டங்களை நடத்திய சிங்கள மக்கள், பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும்போது வடக்கில் புதிதாக புத்தர் சிலைகளை வைப்பதும், அடாத்தாக குடியேற்றங்களை செய்வதும் நியாயம் என்று வாதாடத் தொடங்கியுள்ளனர். இந்தியாவின் உணவுப்பொருட்கள், மருந்துகளைப் பெற்று பயனடைந்த இதே மக்கள், ''மாகாண சபைத் தேர்தலை நடத்தச் சொல்ல இந்தியா எமக்கு யார்?'' என்று கேட்கின்றனர்.

ஆக, என்ன பிரச்சினைகள், மோசமான நிலைமைகள் இந்நாட்டுக்கு ஏற்பட்டாலும் சிங்கள மக்களின் மகாவமிச மனநிலை மாறப்போவதில்லை. ''ஜே.ஆர். உண்மையான பௌத்தனாக இருந்தால் நாங்கள் ஆயுதங்களை ஏந்தியிருக்கமாட்டோம்'' என்ற புலிகளின் கூற்றில் நியாயம் இருப்பதை தமிழர்கள் இப்போது உணர்ந்திருக்கின்றனர்.

முள்ளிவாய்க்கால் நினைவுதினமான இன்று, போர்க்களத்திலும், சண்டை வரலாற்றிலும் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துவது தமிழரின் கடமையும் பொறுப்புமாகும். மாண்டோரும், காணாமற்போனோரும் மீள வரமாட்டார்கள் என்ற யதார்த்தம் புரிந்தாலும் அவர்கள் இன்னமும் உயிர்வாழும் தமது உறவுகளின் இதயங்களில் வாழ்கிறார்கள் என்பதே மறக்கமுடியாத உண்மை. முள்ளிவாய்க்கால் என்பது புனிதப்பிரதேசமாகவும், வணங்கப்படும் இடமாகவும் மாறியது அதனால்தான். ஆட்சியாளர்களுக்கு இந்த உணர்வுகள் புரிய வாய்ப்பில்லை. அவர்களுக்கு அதற்கான தேவையும் இல்லை. எவ்வாறாயினும், நிறைவடைந்த போருக்குப் பின்னர் தமிழர்கள் தொடர்பில் ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாடும் விடுதலைப்புலிகளின் நினைவையே தமிழர் கண்முன் கொண்டு வருகின்றன. அந்த வெற்றிடத்தை நினைவில் கொண்டுவருகின்றன. அதுவே யதார்த்தம்.

# அரசாங்கத்தின் தேர்தல் தெரிவுகள்!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ்க்கட்சிகளுடன் முன்னெடுத்திருக்கும் பேச்சுவார்த்தைகள் அந்த இரு மாகாணங்களிலும் தேர்தல்களை நடத்துவதற்கு சாத்தியமான ஒரு முன்னோடியாக பார்க்கப்படுகின்றன. திட்டமிட்டபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் மறுப்பதால் அதன் தார்மீக நியாயப்பாடு பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், ஏதோ ஒருவகை தேர்தலை நடத்துவதில் ஜனாதிபதிக்கு அக்கறை இருக்கிறது.

மக்களால் அன்றி பாராளுமன்றத்தினால் தான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டமை கவனித்துச் சீர்செய்யப்படவேண்டிய ஒரு தார்மீக நியாயப்பாட்டு பிரச்சினையை தோற்றுவிக்கிறது என்பதை ஜனாதிபதி அறிவார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் திரும்பத்திரும்ப ஒத்திவைக்கப்பட்டதற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லை அல்லது அதற்கு செலவிடும் பணத்தை தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் வேறு தேவைகளுக்கு நல்லமுறையில் பயன்படுத்தலாம் என்று கூறப்படும் காரணங்கள் ஒரு ஜனநாயக அல்லது சட்டத்தின் ஆட்சி நோக்கில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவை அல்ல என்பது தெளிவானது.

இவ்வருட இறுதி அளவில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறும் என்றும் தமிழ்க்கட்சிகளுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அதுவே காரணம் என்றும் ஊகங்கள் வெளியாகின்றன.

பௌத்தர்கள் வாழாத பகுதிகளில் பல பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவது அந்தப் பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பெரும் மனவேதனையை ஏற்படுத்தியிருக்கிறது. ஜனாதிபதிக்கும் தமிழ்க்கட்சிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் ஆராயப்படும் முக்கிய பிரச்சினைகளில் இந்த பௌத்த விகாரை நிர்மாணமும் ஒன்று. வடக்கு - கிழக்கின் பல்வேறு பகுதிகளில் புராதன பௌத்த அழிபாடுகள் தொல்லியல் திணைக்களத்தினால் கண்டுபிடிக்கப்படுகின்றன. அதேவேளை புராதனமானவையும் அண்மைக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டவையும் என பல இந்துக்கோவில்கள் இனந்தெரியாத குழுக்களினால் நிர்மூலம் செய்யப்பட்டுவருகின்றன. அந்தப் பகுதிகளில் பெருமளவில் பாதுகாப்புப் படைகளின் பிரசன்னம் இருக்கின்ற போதிலும், இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவது அதன் பின்னணியில் அரசாங்கம் இருக்கிறது என்ற சந்தேகத்துக்கு வழிவகுத்திருக்கிறது.

தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துவதன் மூலம் இந்த பிரச்சினையை கையாளுவதற்கு ஜனாதிபதி துரிதமாக அக்கறை காட்டியிருக்கிறார். அரசாங்கத்திடம் தற்போது பணம் இல்லை என்பதால் வடக்கு - கிழக்கில் தொல்லியல் திணைக்களத்தின் பணிகளுக்கு பௌத்த பிக்குகள் நிதி வழங்குகிறார்கள் என்பதை ஜனாதிபதியின் விசாரணைக்கு பதிலளித்தபோது அந்த திணைக்கள அதிகாரிகள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு - கிழக்கு 30 வருடங்களாக கவனிக்கப்படாமல் இருந்த காரணத்தினால் அந்த மாகாணங்களில் தொல்லியல் ஆய்வுப்பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதாகவும் தாங்கள் அரசாங்கத்திடம் இருந்து அல்ல, பல்வேறு நிறுவனங்களிடம் இருந்து நிதியைப் பெறுவதாகவும் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதியிடம் கூறியிருக்கிறார். சில சந்தர்ப்பங்களில் தொல்லியல் திணைக்களத்துக்கு பிக்குகளிடம் இருந்து பணம் கிடைக்கிறது என்றும் அவர் தெரிவித்தார். தொல்லியல் முக்கியத்துவமுடைய இடங்கள் அரசுக்கு சொந்தமானவை என்றும் அவை அரசினால் பராமரிக்கப்படுபவையாக இருக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி கருத்து வெளியிட்டார்.

**சகலரையும் அரவணைக்கும் அணுகுமுறை**

இலங்கையின் பௌத்த பாரம்பரியம் நாட்டின் இன, மத பெரும்பான்மையினரின் ஆழமான உணர்வுபூர்வமான மதிப்புக்குரியது. இது அரசினாலும் பெரும்பாலும் பிரதிபலிக்கப்படுகிறது. இலங்கையின் அரசியலமைப்பு ஏனைய சமயங்களை பின்பற்றுபவர்களின் உரிமைகளையும் மதிக்கின்றபோதிலும், பௌத்த சமயத்துக்கே அதிமுன்னுரிமையை வழங்குகிறது. தொல்லியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை தாதுகோபுர உருவத்தைக் கொண்டதாக இருக்கிறது. இந்த கோபுரம் நாட்டின் பௌத்த கலாசாரப் பாரம்பரியத்தின் மிகவும் பரவலான ஓர் அங்கமாக விளங்குகிறது.

இலங்கையில் பௌத்த சமயத்துக்கு கொடுக்கப்படுகின்ற விசேட அந்தஸ்து அரசியல்வாதிகளினால் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. சமயம் அல்லது இனம் அல்லது இரண்டுமே ஆபத்துக்குள்ளாகியிருப்பதாகவும் தாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு மக்கள் வாக்குகளை அளித்தால் அவற்றை பாதுகாப்பதாகவும் அரசியல்வாதிகள் கூறுவார்கள். இவர்களில் பலர் தங்களது தேசியவாத கருத்துகளை வலுப்படுத்துவதற்கு சதிக்கோட்பாடுகளை முன்வைத்து தங்கள் அரசியல் இருப்பை உறுதிசெய்வதற்கு முயற்சிக்கிறார்கள். தேசிய மட்ட அரசியல்வாதிகளில் மிகமிகச் சிலரே இந்த குறுகிய நோக்குடைய தேசியவாதத்தை எதிர்ப்பதற்கு முன்வருகிறார்கள். தற்போதைய ஜனாதிபதி அவர்களில் ஒருவர்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை அடுத்து 'அரகலய' போராட்டத்தின்போது அதிகாரத்தில் இருந்த அரசியல் தலைவர்களின் முறைகேடுகளும் ஊதாரித்தனங்களும் அம்பலப்படுத்தப்பட்டன. இனவாதப் பிரசாரங்களினால் தங்களை இனிமேலும் ஏமாற்றமுடியாது என்று குரல் கொடுத்த இளம் ஆர்ப்பாட்டக்காரர்கள் (அவர்களில் பெரும்பாலானவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள்) இன, சமய வேறுபாடுகளுக்கு அப்பால் சகல குடிமக்களும் சமத்துவமானவர்கள் என்று முழக்கம் எழுப்பினர்.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டிய 'அரகலய' போராட்டத்தின் விளைவாக நாட்டின் அதியுயர் பதவியை அடைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமத்துவத்துக்கும் நீதிக்கும் பொருளாதாரக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலின் அவசியத்துக்கும் குரல் கொடுத்த இளைஞர்களை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தார் என்பது ஒரு முரண்நகையாகும். பதிலாக தேசத்தைக் கட்டியெழுப்பும் மகத்தான பணிக்கு அந்த இளைஞர்களின் சக்தியையும் இலட்சியவாதத்தையும் பயன்படுத்துவதற்கு அவர் முன்வந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரிகளிடம் தனது கருத்தை முன்வைப்பதில் ஜனாதிபதி வெளிக்காட்டிய நேர்மையும் வெளிப்படைத் தன்மையும் இன, சமய பன்முகத்தன்மையின் ஒரு நடுநிலையான பிணக்குத் தீர்க்கும் பாத்திரத்தையே அரசு வகிக்கவேண்டும் என்ற பண்பு முறைமையின் ஒரு வெளிப்பாடாகும். திறந்த மனதுடனும் தெளிவாகவும் பேசுவதற்கு அவர் முன்வந்தமையும் சகல தரப்புகளையும் அரவணைக்கக்கூடிய ஒரு பாதையில் அரச நிறுவனங்களை வழிநடத்துவதில் அவர் நாட்டம் காட்டியமையும் இன, சமய சிறுபான்மை இனத்தவர்களினால் பெரிதும் வரவேற்கப்பட்டிருக்கும்.

ஜனாதிபதியின் இந்த அறிவுபூர்வமான பண்பை அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டியதன் அவசியத்தை சில மாதங்களுக்கு முன்னர் அவர் வலியுறுத்திய வேளையிலும் காணக்கூடியதாக இருந்தது.

**மந்தமான வாய்ப்புக்கள்**

ஒவ்வொரு மாகாணத்திலும் தங்களின் குறிப்பிட்ட விவகாரங்களை நிர்வகிக்க தலைவர்களை தெரிவுசெய்வதற்கு மக்களுக்கு அதிகாரமளிக்கும் மாகாணசபைகள் என்ற அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட முறைமை ஒன்றை நிறுவுவதே 13ஆவது திருத்தத்தின் பிரதான அம்சமாகும். ஆனால், நான்கு வருடங்களுக்கும் அதிகமான காலமாக மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படவில்லை. அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட நிறுவனங்களாக மாகாணசபைகள் இயங்கவில்லை.

பதிலாக மாகாணங்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநர்களினால் நிர்வகிக்கப்படுகின்றன. இது அதிகாரப்பரவலாக்கத்தை கேலிக்குள்ளாக்குகிறது. மக்களுடன் கலந்தாலோசிக்காமல் தங்களின் இஷ்டப்படி ஆளுநர்களினால் ஆளப்படும் நிர்வாக அமைப்புகளாக மாகாணசபகள் மாறிவிட்டன. மக்களால் தெரிவுசெய்யப்படுகின்ற பிரதிநிதிகளை விடவும் கூடுதல் அதிகாரங்களை ஆளுநர்களுக்கு வழங்கும் மாகாணசபைகள் சட்டத்தை மறுபரிசீலனை செய்யவேண்டியது அவசியமாகும்.

ஆனால், 1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாணசபைகள் முறை அறிமுகப்படுத்தப்பட்டதால் அதை இலங்கை அரசை பலவீனப்படுத்தக்கூடிய ஓர் இந்தியத் திணிப்பு என்று சிங்களப் பெரும்பான்மையினர் ஒருவித சந்தேகத்துடன் நோக்குவது துரதிர்ஷ்டவசமானது. கைச்சாத்திடப்பட்ட வேளையில் சர்ச்சைக்குரியதாக இருந்த இந்த சமாதான உடன்படிக்கை நாட்டின் பொது வாழ்வில் தொடர்ந்து குறைத்து மதிப்பிடப்படும் ஒன்றாகவே விளங்குகிறது.

உடன்படிக்கையின் பிரகாரம் விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்க இந்தியா இணங்கிய அதேவேளை, இந்திய பாணியை அடிப்படையாகக் கொண்ட மாகாணசபைகளை நிறுவ இலங்கை இணங்கியது. இரு பணிகளுமே முழுமையாக இடம்பெறவில்லை. மாகாணசபைகள் முறை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமோ அவ்வாறு செய்யப்படாததால் தற்போது செயற்படாமல் இருக்கும் சூழ்நிலையில், அது ஒரு வீண்விரயமாக நோக்கப்படுகின்ற போக்கை காணக்கூடியதாக இருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடங்கி மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதில் உள்ள பிரச்சினை அது சிங்களவர்கள் மத்தியில் ஐயங்களைத் தூண்டிவிடும் என்பதாகும். தற்போது அதிகார மையத்தில் இருந்து அகற்றப்பட்டிருக்கும் குறுகிய தேசியவாத குழுக்கள் அந்த ஐயங்களை தங்களுக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்த முயற்சிக்கும். ஜனாதிபதி தமிழர்களுக்கு சார்பாக செயற்பட்டு வடக்கும் கிழக்கும் இந்தியாவின் ஆதிக்கத்தில் வருவதற்கு வழிவகுக்கிறார் என்று பிரசாரம் செய்வதிலோ அல்லது வேறு பீதிகளைக் கிளப்பிவிடுவதிலோ இந்த குறுகிய தேசியவாத குழுக்களுக்கு எந்தவிதமான தயக்கமும் கிடையாது.

மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதாக இருந்தால் நாட்டிலுள்ள சகல மாகாணங்களிலும் அவை ஒரே நேரத்தில் நடத்தப்படவேண்டும். அத்தகைய ஒரு சூழ்நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு தீர்மானித்தபோது, எதிர்நோக்கிய திரிசங்கு நிலையை அரசாங்கம் மீண்டும் எதிர்நோக்கும். அண்மைய எதிர்காலத்தில் தேர்தல்களுக்கான வாய்ப்புக்கள் தொடர்ந்து மந்தமாகவே இருக்கின்றன.



கலாநிதி
ஜெகான் பெரேரா

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1912 – முதலாவது இந்தியத் திரைப்படம் ஸ்ரீ பந்தலிக் மும்பையில் வெளியிடப்பட்டது.
- 1969 – அப்பல்லோ-10 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1974 – அணுகுண்டு சோதனை: 'சிரிக்கும் புத்தர்' என்ற பெயரிடப்பட்ட திட்டத்தில் இந்தியா தனது முதலாவது அணுகுண்டை வெற்றிகரமாக சோதித்தது.
- 1984 – அன்னலிங்கம் பகீரதன், சயனைட் அருந்தி உயிர்நீத்த முதலாவது விடுதலைப்புலிப் போராளி என்ற பெருமையைப் பெற்றார்.
- 2009 – 26 ஆண்டுகள் நீடித்த ஈழப்போர் முடிவுக்கு வந்ததாக இலங்கை அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது. இலங்கையும் அதன் நட்பு நாடுகளும் ஒருசேர 53,000 இற்கும் மேற்பட்ட பூர்வகுடி தமிழ் மக்களைக் கொன்ற நாள் என்று தமிழர்கள் குற்றஞ்சாட்டிய நாள் இன்றாகும்.
- 2010 – நாடு கடந்த தமிழீழ அரசு நிறுவப்பட்டது.

# வைத்தியர் ஷாஃபியின் மனு நிராகரிப்பு

குருணாகல் வைத்தியசாலையின் மகப்பேற்று விஷேட வைத்திய நிபுணர் ஷாஃபி ஷிஹாப்தீன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தம்மைக் கைதுசெய்து தடுத்துவைத்தமை சட்டவிரோதமானது என உத்தரவிடக் கோரி குருணாகல் வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் ஷாஃபி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவே இவ்வாறு உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர்களான விஜித் மலல்கொட, யசந்த கோதாகொட மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இது தொடர்பான விடயங்களை நீண்ட காலம் பரிசீலித்ததன் பின்னர் இந்தத் தீர்மானத்தை நேற்று வழங்கியுள்ளது.

குருணாகல் பொலிஸாரினால் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் பணச்சலவைச் சட்டத்தின் கீழ் தாம் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைப்பட்டிருந்தமை சட்டவிரோதமானது என உத்தரவிடக்கோரி வைத்தியர் ஷாஃபி இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு ஆளுநர் நியமனம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த சமிக்ஞையாகும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஒரே தடவையில் தமிழ் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையானது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும். அதேபோல நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த சமிக்ஞையையும் இதன்மூலம் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மூன்று ஆளுநர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் பேசும் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளுக்கு தமிழ் ஆளுநர்களை நியமிக்குமாறு தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்து வந்தனர். மக்களின் கோரிக்கையும் அதுவாகவே இருந்தது. அந்தக் கோரிக்கையை ஜனாதிபதி நிறைவேற்றியமை வரவேற்கத்தக்க விடயம்.

வடக்கு மாகாணத்தில் தமிழ் ஆளுநர்கள் பதவி வகித்தபோதும் கிழக்கு மண்ணுக்கு முதன்முறையாக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டமை மகிழ்ச்சி. அதுவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அந்தப் பதவிக்கு வந்திருப்பது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக அமைந்துள்ளது.

நாட்டில் மாகாணசபைகளில் தற்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லை. எனவே, நிர்வாகம் என்பது ஆளுநர் வசமும், பிரதம செயலாளர்கள் வசமும்தான் உள்ளது. எனவே, கிழக்கு மாகாணத்தில் சிறந்த சேவையை புதிய ஆளுநர் வழங்குவார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அவர் மூலம் சிறந்த சேவையைப் பெற்றுக்கொள்ளுமாறு மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.



செந்தில் தொண்டமான் மாகாணசபை உறுப்பினராக, அமைச்சராக, பதில் முதல்வராக பதவி வகித்துள்ளார். ஆக மத்திய அரசுக்கும், மாகாண அரசுக்கும் இடையில் ஏற்படும் நெருக்கடிகளை எப்படிச் சமாளிப்பது என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆகவே, சிறப்பான சேவைகள் இடம்பெறும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என்றார்.

# கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான் நியமனம்

## மலையக மக்களுக்கு அரசாங்கம் வழங்கிய கௌரவம் என்கிறார் ஆனந்தகுமார்

கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளமையானது மலையக மக்களுக்கு அரசாங்கம் வழங்கிய கௌரவமாகும் என தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் ஜனாதிபதி விஷேட குழுவின் உறுப்பினரும் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.



கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள செந்தில் தொண்டமானுக்கு வாழ்த்துத் தெரிவித்து அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முதல் முறையாக மலையக மக்களில் இருந்து ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளமையை கட்சிபேதங்கள் கடந்து அனைவரும் வரவேற்க வேண்டும். இ.தொ.காவை வழிநடத்தும் செந்தில் தொண்டமான், கிடைக்கப்பெற்றுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் பதவியினூடாக மேலும் பல சேவைகளைச் செய்ய வாழ்த்துகிறேன்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை மிக நீண்டகாலமாகவே உள்ளது. அதற்கு தகுதியான ஒருவராக செந்தில் தொண்டமான் உள்ளார்.

எதிர்காலத்தில் கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கு இந்த நியமனம் பல வெற்றிகளைப் பெற்றுக்கொடுக்குமென நான் நம்புகிறேன்.

அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து பணியாற்றக்கூடிய ஒருவராகவுள்ள செந்தில் தொண்டமானை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களிடம் வேண்டிக்கொள்கிறேன். அதேபோன்று கிழக்கு மாகாண அரசியலிலும் அவருடன் இணைந்து தமது பணிகளை சுமுகமாக முன்னெடுக்க கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கிறேன்.

செந்தில் தொண்டமானின் நியமனம் என்பது சமகால அரசாங்கம் மலையக மக்களுக்கு வழங்கிய ஒரு கௌரவமாகவே பார்க்கிறேன். உயர்பதவிகளில் எப்போதும் கண்டுகொள்ளப்படாதிருந்த சமூகத்துக்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அளித்துவரும் முக்கியத்துவத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர் மேலும் பல சேவைகளை மலையக மக்களுக்கு செய்வதில் உறுதியாகவுள்ளார். அதற்கான ஒத்துழைப்புகளை அனைவரும் வழங்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (17.05.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 200.3272 | 212.1423 |
| கனேடியன் டொலர் | 222.8134 | 235.9722 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.5125 | 45.7664 |
| யூரோ | 327.4661 | 345.1132 |
| ஜப்பான் யென் | 2.2101 | 2.3267 |
| சிங்கப்பூர் டொலர் | 224.3079 | 237.1321 |
| ஸ்ரேலிங் பவுன் | 376.6772 | 396.1410 |
| சுவிஸ் பிராங்க் | 334.9288 | 355.5806 |
| ஐ.அ. டொலர் | 302.4257 | 316.1880 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 823.2987 |
| குவைட் | குவைட் தினார் | 1,010.9898 |
| ஓமான் | ஓமான் றியால் | 806.2028 |
| கட்டார் | கட்டார் றியால் | 85.1367 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 82.7745 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 84.5304 |

# கதிர்காம பாதயாத்திரை: காட்டுவழிப்பாதை ஜூன் 12ஆம் திகதி திறக்கப்படும்

## அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டக்ளஸ்





(வி.சுகிர்தகுமார்)

கதிர்காம பாதயாத்திரைக்கான காட்டுவழிப்பாதை ஜூன் 12ஆம் திகதி திறக்கப்பட்டு 25ஆம் திகதி மூடப்படும் என அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம். எ. டக்ளஸ் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், கதிர்காம பாதயாத்திரை தொடர்பாக உகந்தை முருகன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற சமயத்தலைவர்கள், அரச திணைக்களங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட உயர்மட்டக் கலந்துரையாடலின்போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வருடம் சுமார் 45,000 பக்தர்கள் பாதயாத்திரையில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடம் 35,000 பாதயாத்திரிகர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 28,838 பாதயாத்திரிகர்களே கலந்து கொண்டனர்.

ஆயினும், எரிபொருள் விலைகுறைப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி தற்பொழுது ஓரளவு தணிந்துள்ளமையால் அதிகளவான பாதயாத்திரிகர்கள் இம்முறை கலந்து கொள்வதற்கான வாய்ப்புள்ளது.

பாதயாத்திரிகர்கள் பொலித்தீன் மற்றும் சிறிய தண்ணீர்ப் போத்தல்களை கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் தொடக்கம் முதியவர்கள் வரை ஆண்கள் - பெண்கள் என அனைவரும் கலாசார ஆடையுடன் மாத்திரம் யாத்திரையில் கலந்து கொள்ள வேண்மென்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கதிர்காம பாதயாத்திரைக்கான குமண ஊடான காட்டுவழிப்பாதை ஜூன் 12ஆம் திகதி காலை உகந்தை முருகன் ஆலயத்தில் இடம்பெறும் பூஜையைத் தொடர்ந்து 7 மணியளவில் திறக்கப்பட்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி மூடப்படும் .

இக்காலத்தில் தினமும் காலை 6 மணிக்கு திறக்கப்படும் பாதை பிற்பகல் 3 மணிக்கு மூடப்படும் .

அதேபோல் பாதயாத்திரிகர்களுக்கான பாதுகாப்பு, சுகாதார சேவைகள், குடிநீர் வசதி போன்றவை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

லாகுகல பிரதேச செயலகத்தின் வழிகாட்டலில் சிவதொண்டர் அமைப்பு மற்றும் தம்பிலுவில் சைவநெறி கூடம் மற்றும் சேவற்கொடியோன் உள்ளிட்ட அமைப்புகள் குடிநீரை வழங்கும் பொறுப்பை ஏற்றுள்ளன. லாகுல பிரதேச செயலாளர் என்.நவனீதராஜா தலைமையில் ஆலய வண்ணக்கர் எம்.டி.சுதுநிலமேயின் பங்களிப்போடு இடம்பெற்ற இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன், லாகுகல பிரதேச செயலக அதிகாரிகள், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பாணமை விகாராதிபதி, ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.க.கு.சீதாராம குருக்கள், உதவிக்குரு சிவஸ்ரீ ஆ.கோபிநாத் சர்மா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.கு.சீதாராம குருக்கள் நடத்தி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## பெயர் மாற்றம்

ரியாஸ் பேக்ரி வீதி, ஐயங்கேணி என்னும் முகவரியில் வசிக்கும் 200080903135 ஆம் இலக்க தேசிய அடையாள அட்டை இலக்கத்தையுடைய சித்தி பாத்திமா சர்மிலா ஆகிய நான் சித்தி பாத்திமா சர்மலா எனும் எனது பழைய பெயரை பாத்திமா ஷர்மிலா என மாற்றி பயன்படுத்தி வருகின்றேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய்க்கிழமை 2023.05.16

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5116 | ரூ. 10,000,000.00 | P | 8 0 4 6 2 2 |
| கொவிசெத | 3358 | ரூ. 103,604,901.84 | C | 27 44 46 49 |
| ஜாதிக சம்பத | 1571 | ரூ. 11,009,517.20 | கும்பம் | 0 9 0 7 3 2 |
| தன நிதானய | 1146 | ரூ. 90,250,176.80 | Z | 21 33 48 68 |
| ராசி சுப பலன் (Handahana) | 425 | ரூ. 2,833,056.80 | மீனம் (விசேட இலக்கினம்: மீனம்) | 03 04 08 59 |
| மெகா பவர் | 1464 | ரூ. 321,140,518.00 | U (சுப்பர் இலக்கம் 24) | 31 69 73 77 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## மோட்டார் சைக்கிள் விற்பனைச் சந்தை -அநுராதபுரம்

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NC BHC-53xx | TVS | NTORQ |
| CP BEX-60xx | YAMAHA | RAY ZR |
| NW BHJ-54xx | YAMAHA | RAY ZR |
| NW BGD-12xx | HONDA | DIO |
| NC BGZ-13xx | YAMAHA | RAY ZR |
| NC BHM-74xx | TVS | NTORQ |
| NC BHL-97xx | TVS | NTORQ |
| NC BIC-14xx | TVS | NTORQ |
| NC BET-88xx | TVS | METRO |
| NC BFC-52xx | HONDA | DIO |
| NP BIJ 15xx | YAMAHA | RAY Z |
| NC BHF-91xx | YAMAHA | RAY-ZR |
| NC BIQ-27xx | HONDA | DIO |
| NC BHW-67xx | HONDA | DIO |
| NC BIS-38xx | YAMAHA | RAY-ZR |
| NC BIQ -53xx | BAJAJ | CT100 |
| NC BGK-27xx | BAJAJ | PULSER |
| NW BDR-85xx | HONDA | DIO |
| NC BHF-61xx | TVS | NQR71R |
| NC BDO-40xx | BAJAJ | CT 100 |
| NW BGH-68xx | BAJAJ | PULSER |
| NW BDK-19xx | HONDA | DIO |
| NW BHE-99xx | HONDA | DIO |
| NC BFW-20xx | HONDA | DIO |
| NC BGR-14xx | BAJAJ | PULSER |
| NC BGJ-24xx | BAJAJ | PULSER |
| NC BGQ-58xx | YAMAHA | RAY-ZR |
| NC BHZ-31xx | TVS | NTORQ |
| NW BFI-16xx | HONDA | DIO |
| NW BHW 09xx | HONDA | DIO |
| NW BHA-97xx | HONDA | DIO |
| NC YT-15xx | BAJAJ | RE 04 |
| WP QZ-56xx | BAJAJ | RE 04 |
| NC BEZ-21xx | HONDA | DIO |
| NW BHK 32xx | YAMAHA | FZ |
| NW BFL-49xx | HONDA | DIO |
| NW BHJ-12xx | YAMAHA | FZ |
| NW BGG-51xx | HONDA | DIO |

இடம்: யாழ்ப்பாண சந்தி, அநுராதபுரம் (யுனைட்டட் மோர்ட்டர்ஸ் நிறுவனத்துக்கு முன்பாக)
ஏலத் திகதி: 20.05.2023 – காலை 10.30
பார்வை நேரம் காலை 8.30– 10.30

## மோட்டார் சைக்கிள் விற்பனைச் சந்தை - நாரம்மலை

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NW BFH 29xx | HONDA | DIO |
| NW BFE-65xx | HONDA | DIO |
| SG BHE-53xx | HONDA | DIO |
| NW BFR 52xx | HONDA | DIO |
| WP BHB 82xx | HONDA | DIO |
| NW BIB-41xx | HONDA | DIO |
| NW BGV-55xx | HONDA | DIO |
| NW BFS 94xx | HONDA | DIO |
| NW BII-76xx | HONDA | DIO |
| NW BHD 57xx | HONDA | DIO |
| NW BIA 80xx | HONDA | DIO |
| NW BHL 39xx | HONDA | DIO |
| NW BGZ 35xx | HONDA | DIO |
| NW BIQ 23xx | HONDA | DIO |
| CP BGL 8647 | HONDA | DIO |
| NW BEE 23xx | YAMAHA | FZ-S |
| NW BIM-61xx | HONDA | DIO |
| NW BIF-44xx | HONDA | DIO |
| WP BDM 78xx | HONDA | DIO |
| WP BDQ 80xx | HONDA | DIO |
| WP BDV 48xx | HONDA | DIO |
| WP BFE 35xx | HONDA | DIO |
| WP BFG 89xx | HONDA | DIO |
| NW BFS 25xx | HONDA | DIO |
| SP BGM-08xx | BAJAJ | PLATINA |
| NW BCH 49xx | YAMAHA | RAY ZR |
| WP BGX 45xx | HONDA | DIO |
| WP BII 58xx | HONDA | DIO |
| WP BGA 22xx | HONDA | DIO |
| NW BEW 20xx | BAJAJ | PULSAR 150 |
| NW BGW 79xx | HONDA | DIO |
| NW BEQ 16xx | HONDA | DIO |
| NW BEM-97xx | HONDA | DIO |
| NW BGN 56xx | HONDA | DIO |
| NW BAH 96xx | BAJAJ | PULSAR 135 |
| NW BGW-85xx | HONDA | DIO |
| WP BFC 02xx | HONDA | DIO |
| WP BEE-06xx | HONDA | DIO SCV 110 |
| WP AAL 40xx | BAJAJ | RE 205 |
| WP BGY 46xx | HONDA | DIO SCV 110 |
| WP BGQ-11xx | HONDA | DIO SCV 110 |
| WP BGN-13xx | BAJAJ | PULSAR 150 |
| WP BGP 09xx | HONDA | UG 4.5 |
| WP BFS 51xx | HONDA | DIO SCV 110 |
| WP BGW 42xx | HONDA | DIO SCV 110 |
| SP BIP-58xx | YAMAHA | DIO SCV 110 |
| WP BGM-76xx | BAJAJ | RAY-ZR |
| WP BHT 09xx | TVS | CT-100 |
| NW BCP-58xx | BAJAJ | NTORQ |
| NW BGH-78xx | BAJAJ | PULSAR-150 |
| NW BFE-93xx | YAMAHA | CT 100 |
| NW BCL-90xx | HONDA | FZ |
| NW BHX-19xx | HONDA | DIO |
| SG BGW-61xx | HONDA | DIO |
| NW BFE-63xx | HONDA | DIO |
| WP BIY-28xx | HONDA | DIO |
| | | Grazia |

இடம்: இல.91, குருநாகல் வீதி, நாரம்மலை
ஏலத் திகதி: 22.05.2023 – காலை 10.30
பார்வை நேரம் காலை 8.30– 10.30

## மோட்டார் சைக்கிள் விற்பனைச் சந்தை -மாத்தறை

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| SP BHX-12xx | YAMAHA | FZ |
| SP BEY-69xx | HONDA | DIO |
| SP BGC 86xx | HONDA | DIO |
| WPBIY48xx | YAMAHA | RAY ZR |
| SP BGQ-55xx | YAMAHA | FZ |
| SP BFU-84xx | HONDA | DIO |
| SP BHW-11xx | HONDA | DIO |
| SP BIS-19xx | HONDA | DIO |
| SP BET-64xx | YAMAHA | RAZ ZR |
| SP BES-40xx | HONDA | DIO |
| SP BFT-30xx | HONDA | DIO |
| SP BGF-23xx | BAJAJ | PULSAR |
| SP BCR-30xx | BAJAJ | PLATINA |
| SP BHQ-11xx | HONDA | DIO |
| SP BIJ-83xx | TVS | NTORQ |
| SP BHM-23xx | HONDA | DIO |
| SP BEG-06xx | BAJAJ | PULSAR |
| SP BGG-73xx | HERO | MAESTRO EDGE |
| SP- BIP-40xx | HONDA | DIO |
| SP BFN 06xx | HERO | MAESTRO EDGE |
| SP BEE-63xx | BAJAJ | CT100 |
| SP BEG-67xx | HONDA | DIO |
| SP BFY-83xx | HONDA | DIO |
| SP BIJ-07xx | HONDA | DIO |
| SP BGD 39xx | HONDA | DIO |
| SP BAT-86xx | BAJAJ | PULSAR |
| SP BEV-53xx | HONDA | DIO |
| SP BFY 49xx | HONDA | DIO |
| SP BEV-41xx | YAMAHA | FZ |
| SP BGM-16xx | HONDA | DIO |
| SP BDT-45xx | BAJAJ | PULSAR |
| SP BEU 08xx | HONDA | DIO |
| SP BGQ-10xx | HONDA | DIO |
| SP BHU-44xx | YAMAHA | FZ |
| WP BEJ-97xx | YAMAHA | FZ |
| SP BHW-21xx | YAMAHA | RAY ZR |
| SG BGU-53xx | YAMAHA | FZ |
| SP BGU-44xx | HONDA | DIO |
| WP BCM-96xx | BAJAJ | PULSER |
| WP BGV-40xx | HONDA | DIO |
| WP BFB-71xx | YAMAHA | FZ |
| SP BFB-00xx | TVS | WEGO |

இடம்: இல.578, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை
ஏலத் திகதி: 24.05.2023 – காலை 10.30
பார்வை நேரம் காலை 8.30– 10.30

உபுல்-071 9919986
விஷ்வா-077 4787096

துரித இல. 0717807788 : 0710356125

முன்னறிவித்தலின்றி எந்தவொரு வாகனத்தையும் விற்பனை சந்தையிலிருந்து அகற்றுவதற்கு கம்பனிக்கு உரிமையுண்டு.
*நிபந்தனைகளுக்குட்பட்டது

Associated Motor Finance Company PLC
தலைமை அலுவலகம்,இல.146, ஹெவலொக் வீதி, திம்பிரிகஸ்யாய, தொலைபேசி: 0115 553663

# யாழ்.முன்னாள் மேயர் ஆர்னோல்ட் கைதாகி பிணையில் விடுதலை



**யாழ்.நிருபர்**

யாழ் மாநகர சபை முன்னாள் முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் நீதிமன்றத்தினால் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக் கப்பட்டார்.

மேலும் குறித்த வழக்கு எதிர்வரும் ஜூலை 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தனது சட்டத்தரணியுடன் யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் சரணடைந்த நிலையில் பொலிஸாரினால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதி கிளைக் கூட்டத் துக்குப் பின்னர் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக சட்டத்தரணியுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு சென்றபோதே இமானுவேல் ஆர்னோல்ட் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் சரீரப் பிணையில் விடுவிக்கப் பட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதி கிளைக் கூட்டத் துக்குப் பின்னர் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதலை யாழ். மாநகர முன்னாள் முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் மேற்கொண்டதாக காயமடைந் தவர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருநெல்வேலியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் திருநெல்வேலி பால்பண்ணைக்கருகாமையில் அமைந்துள்ள முகாமைத்துவ பீடத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மதியம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் கஞ்சி வழங்கும் செயற்றிட்டமும் முன்னெடுக்கப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மும் முகாமைத்துவ பீட மாணவர் ஒன்றியமும் இணைந்து குறித்த செயற்றிட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இதன்போது மாணவர்களால் முள்ளி வாய்க்கால் திட்டமிடப் பட்ட இனப்படு கொலையில் உயிர்நீத்த உறவுகளுக்கான அஞ்சலி செலுத்தப்பட்டதோடு முள்ளி வாய்க்கால் கஞ்சியும் மூன்று மொழிகளிலான துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

இதன்பொழுது அதிகளவான சிங்கள மாணவர்களும் நினைவேந்தலில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மரக்கடத்தல் வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு! சாரதி தப்பியோட்டம் - கான்ஸ்டபிள் காயம்



**வவுனியா நிருபர்**

வவுனியாவில் சட்டவிரோத மரக்கடத்தல் விஷேட அதிரடிப்படையினரால் முறியடிக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் (16.05) அதிகாலை இடம்பெற்ற கடத்தல் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

பறயனாளங்குளம் விஷேட அதிரடிப்படையி னருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்மடு, சாளம்பன் பகுதியில் பொலிஸ் விஷேட அதிரடிப்படை அதிகாரிகள் சட்டவிரோத மரக் கடத்தல் ஒன்றை சுற்றிவளைக்கும் நோக்கில் சென்று சந்தேகத்திற்கிடமான வாகனத்தை நிறுத்துமாறு கோரி வழி மறித்தபோது குறித்த வாகனம் விஷேட அதிரடிப்படை பொலிஸ் கான்ஸ்டபிள் மீது மோதியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

குறித்த வாகனத்தை நிறுத்த வாகனத்தின் முன் சக்கரத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டபோது கப் ரக வாகனத்தில் இருந்த சந்தேக நபர் கப் ஓடிக்கொண்டிருக்கும் போது வாகனத்தில் இருந்து தப்பிச் சென்றதாகவும் விஷேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

பறயனாளங்குளம் விஷேட அதிரடிப்படை முகாமில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் (33529) சந்திரதிலக்க என்பவரே சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த உத்தியோகத்தர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், உத்தியோகத்தரின் காயங்கள் பாரதூரமானதாக இல்லாததால் சிகிச்சை பெற்று வெளியேறியதாகவும் விஷேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட வாகனத்தையும் அதனுள் இருந்த சட்டவிரோதமாக ஏற்றிச்செல்லப்பட்ட ஏழு பெரிய முதிரை மரக்குற்றிகளும் ஈச்சங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

சந்தேக நபரிடம் பறயனாளங்குளம் விஷேட அதிரடிப்படையினர் மற்றும் ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வடபகுதியில் கறுவா செய்கையை ஊக்குவிக்கும் செயலமர்வு சனியன்று

வடபகுதியில் கறுவா செய்கையை ஊக்குவிக்கும் முகமாக அது குறித்த விளக்க செயலமர்வு ஒன்று எதிர்வரும் மே 20 ஆம் திகதி சனிக்கிழமை வட்டுக்கோட்டை பங்குரு முருகன் கோவில் சமூக மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

காலை 10.00 மணி முதல் நண்பகல் 1.00 மணி வரையில் நடைபெறும் இந்தச் செயலமர்வில் கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜீ.ஜீ.ஜெயசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வடக்கில் கறுவாச் செய்கையை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் தொடர்பாக விளக்கவுரை நிகழ்த்துவார். மேலும் கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் பலரும் இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிப்பதுடன், பொதுமக்களின் கேள்விகள், சந்தேகங்களுக்கு பதிலளிப்பார்கள்.

வடபகுதியில் கறுவாச் செய்கையை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதற்கான செய்முறை விளக்கங்களும் இங்கு வழங்கப்படவுள்ளதுடன், ஆர்வமுள்ளவர்களுக்கு கறுவா கன்றுகளும் இலவசமாக வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் யாரும் இந்தச் செயலமர்வில் பங்குகொண்டு பயனடைய முடியுமென இதனை ஏற்பாடு செய்திருக்கும் புவனகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படும் பட்சத்தில் நிகழ்ச்சி இணைப்பாளரான ஐங்கரனுடன் 077 062 9013 எனும் இலக்கத்துடன் தொடபுகொள்ளமுடியும் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழில் எரிகாயங்களுடன் சடலம் மீட்பு



யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் எரிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த கார்த்தி கேசு திருப்பதி (வயது 65) என்பவரே அவரது வீட்டின் மலசல கூடத்தில் எரிகாயங்ஙளுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியர் வீட்டில் தனிமையில் வசித்து வந்ததாகவும், அவரைத் தேடி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வீட்டிற்கு சென்ற நபரே, ஆசிரியர் எரிகாயங்களுடன் சடலமாகக் காணப்பட்டதைக் கண்ணுற்று அயலவர்களுக்கும் கோப்பாய் பொலிஸாருக்கும் தகவல் கொடுத்துள்ளார்.

தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதேவேளை, குறித்த ஆசிரியரின் மனைவி யும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மலசல கூடத்தில் வழுக்கி விழுந்த நிலையில் உயிரி ழந்தார் என அயலவர்கள் தெரிவித்தனர்.

# பாடசாலை செல்லும் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்!!

## பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் வேண்டுகோள்

**நுவரெலியா நிருபர்**

வடகிழக்கு உட்பட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சிறுவர்களின் பாதுகாப்புக்கு தற்போது பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அநேகமான பெற்றோர்கள் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஏனெனில், இன்று வடகிழக்கு பகுதிகளில் சிறுவர்கள் கடத்தப்படுவதாக ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் செய்திகள் பரபரப்பாக வெளிவந்த வண்ணம் உள்ளன. பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் வீடு திரும்புகின்றவரை அவர்களுக்கு பாதுகாப்பற்ற ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவேண்டுமென நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் அரசாங்கத்திடம் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இன்று வடகிழக்கு பகுதிகளில் பாடசாலை செல்கின்ற சிறுவர்கள் கடத்தப்படுவதாகவும் அவ்வாறு சிறுவர்களைக் கடத்த முற்பட்டவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளிவருகின்றன. இவ்வாறான ஒரு நிலையில் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினதாகும்.

கடந்த பல வருடங்களுக்கு முன்பாக மலையக பகுதிகளில் ‘கிறீஸ் பேய்’ நடமாடுவதான ஒரு சம்பவத்தை அன்றைய அரசாங்கமே முன்னெடுத்ததாக பல செய்திகள் வெளிவந்தன. அதன் காரணமாக பல சம்பவங்கள் மலையகத்தில் இடம்பெற்றன.

அது ஒரு பாரிய பிரச்சினையாக அன்றைய காலகட்டத்தில் இருந்தது. பல முயற்சிகளுக்குப் பின்னர் அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால், இன்று வடகிழக்கு பகுதிகளில் சிறுவர்களை மையப்படுதியதாக சில சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இது தவிர, நாள்தோறும் சிறுவர்கள் தொடர்பான செய்திகள் தலைப்புச் செய்திகளாக மாறிவிட்டன. அண்மையில் களுத்துறை விடுதியில் ஏற்பட்ட சம்பவம், தனியார் வகுப்பு நடத்துகின்ற ஆசிரியர் ஒருவர் 16 சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டமை உட்பட பல சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளன.



எனவே, இந்த விடயங்கள் தொடர்பாக அரசாங்கம் விஷேட கவனம் செலுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில், சிறுவர் உரிமைகள் தொடர்பாக இலங்கையில் செயற்படுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்த விடயத்தில் அதிக அக்கறையும் கவனமும் செலுத்த வேண்டும்.

சிறுவர்கள் எந்தவிதமான இடையூறுகளுமின்றி நடமாடுவதற்கும் பாடசாலைக்குச் சென்று வருவதற்குமான பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

ஏனெனில், வடகிழக்கில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் கூட அங்கு பாதுகாப்பான சூழ்நிலை இருந்ததாக அங்குள்ள மக்கள் குறிப்பிடுகின்றார்கள். அப்படியானால் யுத்தத்தின் பின்னர் அவர்களுடைய பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதா? என்ற கேள்வி அனைவரிடமும் தற்பொழுது எழுகின்றது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# இ.போ.ச. பஸ் இடைநிறுத்தம்: மாணவர்கள் பெரும் பாதிப்பு

**ஏ.ஏ.எம்.பாயிஸ்**

பலாங்கொடை பிரதேசத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் மாதாந்த பருவச்சீட்டு (சீசன் டிக்கட்) பெற்றுள்ள மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதிலும் அரச ஊழியர்கள் தொழில்களுக்கு செல்வதிலும் இடையூறு ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களின் நாளாந்த செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து பலாங்கொடை இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போ முகாமையாளர் தர்மஸ்ரீ ஹரிஸ்சந்திரவிடம் வினவியபோது, இந்த டிப்போவில் பஸ் சாரதிகள், நடத்துனர்களின் பற்றாக்குறை நிலவுவதால் உரிய வீதிகளில் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியாதுள்ளதாகத் தெரிவித்தார்.

தற்போது 23 சாரதிகள், 25 நடத்துனர்களுக்கான வெற்றிடம் இங்கு நிலவுவதால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். சில சந்தர்ப்பங்களில் சாரதிகள், நடத்துனர்கள் விடுமுறை பெறும்போது இந்நிலைமை இரட்டிப்பு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இளம் எழுத்தாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு கண்டியில்

**உக்குவளை நிருபர்**

அகில இலங்கை இளம் எழுத்தாளர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கொன்று எதிர்வரும் ஜூன் மாதம் நடுப்பகுதியில் கண்டியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

கட்டுரை, கவிதை, சிறுகதை, உருவகக்கதை, எழுதுவது சமூக வலைத்தலங்கள் ஆகியனவற்றைப் பயன்படுத்துதல் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக நடத்தப்படவுள்ள இக்கருத்தரங்கில் மத்திய மாகாணத்தின் கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய பிரதேசங்களிலுள்ள உயர்தரம் சித்திபெற்ற மாணவ - மாணவியர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கருத்தரங்கில் பங்குபற்றுவோருக்கு உணவு, தேநீர் காகிதாதிகள் என்பன இலவசமாக வழங்கப்படுவதுடன கருத்தரங்கின் இறுதியில் சம்மேளனத்தின் சான்றுகளும் வழங்கப்படும்.

தேவஹுவ நிஜாமுதீன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வை தேசிய அமைப்பாளர் ரசீட் எம். ரியாழ் மற்றும் எம். காதிர்கான் ஆகியோர் இணைந்து நடத்தவுள்ளனர். இக்கருத்தரங்கில் இணைந்துகொள்ளவிரும்புவோர் முற்கூட்டியே தேசிய அமைப்பாளர் ரசீட் எம். ரியாழுடன் தொடர்புகொண்டு பதிவுசெய்து கொள்ளலாம்

# எம்பிலிப்பிட்டிய விபத்தில் இளைஞர் பலி

**ஏ.ஏ.எம்.பாயிஸ்**

எம்பிலிப்பிட்டிய உடவளவ வீதியில் 98 ஆவது மைல்கல் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 18 வயதான இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய - கொலம்பகெதர பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மோட்டார் சைக்கிள் மரமொன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானதில் குறித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின் உயிரிழந்துள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





**ஊவா மாகாண படைவீரர் தினம் ‘ரணவிரு சமரும்’ நிகழ்வு நேற்றுமுன்தினம் (16) பதுளையில் அமைந்துள்ள ஊவா மாகாண படைவீரர் தூபிக்கு அருகாமையில் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் நடைபெற்றது. ஊவா மாகாண ஆளுநர் அலுவலகத்தின் போர்வீரர் நினைவுக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள் கலந்துகொண்டு படைவீரர் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் மதத் தலைவர்கள், ஊவா மாகாண பிரதான செயலாளர் தமயந்தி பரணகம, ஆளுநரின் செயலாளர் ஆர்.எச்.சி.பிரியந்தி உள்ளிட்ட அதிகாரிகள், இராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (பதுளை நிருபர்)**

# சொந்த வீடுகளற்று வெளிநாடுகளில் தொழில்புரிபவர்களுக்கு வீடுகள்

## வீடமைப்பு அமைச்சில் கலந்துரையாடல்

**(அஷ்ரப் ஏ. சமத்)**

வெளிநாடுகளில் தொழில் புரியும் சொந்த வீடுகள் அற்றவர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.



இவ்விடயம் தொடர்பாக ஆராயும் கூட்டமொன்று வீடமைப்பு நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் தேனுக்க விதானகமே, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுச நாணயக்கார ஆகியோரின் இணைத்தலைமையில் நேற்றுமுன்தினம் (16) வீடமைப்பு அமைச்சில் இடம்பெற்றது.

இத்திட்டத்தின் கீழ் பிரதேச செயலகங்கள் ஊடாக தகவல்கள் திரட்டப்பட்டு வீடற்றவர்களுக்கு காணி இருப்பின் வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்புக் கடன் திட்டத்தில் வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன.

வெளிநாட்டில் காணிகளற்ற நிலையில் தொழில் புரிகின்றவர்களுக்கு அவரவர் வாழும் பிரதேசங்களில் அரச காணிகள் இருந்தால் அக் காணிகளை அரச அதிபர் ஊடகப் பெற்று வீடமைப்புத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

வீடமைப்புக் கடன்களைப் பெற்று வீடுகள் நிர்மாணிப்பவர்கள் மாதாந்தம் கடன்களைச் திருப்பிச்செலுத்தக் கூடிய வகையில் வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி ரஜீவ் சூரியராச்சி, இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் ஹில்மி அசீஸ் மற்றும் வீடமைப்பு அதிகார சபை பொது முகாமையாளர் எனப் பலர் கலந்து கொண்டனர்.



மாத்தறை, கம்புருபிட்டியவில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அப்பகுதியில் உயிரிழந்த நபரின் இறுதிச் சடங்கை மேற்கொள்வதில் உறவினர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர். அங்கு வெள்ள நீர் நிறைந்திருந்ததால் பொலிஸாரினதும் பொதுமக்களினதும் உதவியுடன் சடலம் படகில் கொண்டுசெல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

# ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் தமாம் வைபவம்

**(பேருவளை செய்தியாளர்)**



இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான பேருவளை, மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலுடன் இணைந்த ஷாதுலிய்யா ஸாவியாவின் 156 ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் தமாம் வைபவம் எதிர்வரும் 21 ஆம் திகதி மாலை கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம். ரபீக் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறும். ஷாதுலிய்யா உலக ஆன்மிகத் தலைவர் சங்கைக்குரிய ஷேகு ஸஜ்ஜாதா அஷ் ஷெய்க் முஹம்மத் மஹ்தி அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி அவர்களால் இலங்கைக்கான ஷாதுலி தரீக்காக்கான கலீபதுல் குலபாவாக நியமிக்கப்பட்டுள்ள மௌலவி முஹம்மத் ஸஹர் ஆலிம் (பாரி) அவர்களுக்கு இம்மஜ்லிஸில் வரவேற்பளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஷாதுலிய்யா தரீக்காவின் ஸ்தாபகர் அல் குதுபுல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் 850 ஆவது வருட ஜனன தினத்தை முன்னிட்டும் ஷாதுலிய்யா தரீக்காவின் ஏனைய மஷாயிஹ்மார்களின் ஞாபகார்த்தமாகவும் மேற்படி மனாகிப் மஜ்லிஸ் 156 ஆவது வருடமாகவும் இந்த ஸாவியாவில் நடைபெறுகிறது. மனாகிப் மஜ்லிஸின் தமாம் நிகழ்வில் மேற்படி ஸாவியா நிர்வாகிகள், கலீபாக்கள், உலமாக்கள், முகத்தமீன்கள், இஹ்வான்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஜி.எம். அக்பர் அலி குடும்பத்தினர் நேற்று கண்டிக்கு விஜயம் செய்தனர். அவர்களை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நட்சத்திர ஹோட்டலில் சந்தித்து தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினின் ஆட்சி பற்றி விரிவாகப் பேசினார். முன்னாள் நீதியரசர் ஜி.எம். அக்பர் அலியின் புதல்வர் சட்டத்தரணி ஆதிலும் இதில் கலந்து கொண்டார்.

(படம் திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

# பண்ணை நாகபூசணி அம்மன் சிலையை அகற்ற கோரிய வழக்கு தள்ளுபடி

## யாழ். நீதவான் நீதிமன்றம் அதிரடி

பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள நாகபூசணி அம்மன் சிலையை அகற்றுமாறு கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கு நேற்றுமுன்தினம் (16) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த வழக்கை தொடர பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு தொடர்பில் பொலிஸாரின் வழக்கிடு தகைமை மற்றும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் தொடர்பில் கேள்விக்குட்படுத்தி இந்து அமைப்புகள் சார்பில் சட்டத்தரணி என்.சிறிகாந்தா, அகில இலங்கை இந்து மாமன்றம், நல்லூர் ஆதீனம் ஆகியன சார்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உட்பட பல சட்டத்தரணிகள் முன்னிலையாகி கடந்த ஏப்ரல் 18ஆம் திகதி வழக்கு விசாரணையின்போது நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம் மேற்படி வழக்கை தள்ளுபடி செய்தது.



இலங்கைக்கான இந்திய உதவித்தூதுவர் ராகேஷ் நடராஜை யாழ்ப்பாணம் இந்திய உதவித் தூதுவராலயத்தில் சந்தித்த கலைமாமணி மாத்தளை பெ.வடிவேலன், பேராசான் மு.நித்தியானந்தனின் 'மலையகச் சுடர்மணிகள்', 'மலையகம் -200, இலங்கை- இந்திய வம்சாவளி தமிழர் வரலாற்றில் மலையகத்தில் முதல் சாசனம் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்' ஆகிய இரு நூல்களையும் வாழங்கினார். இதன்போது மலையக வரலாற்றுடன் தொடர்புடைய ஆலயங்களின் அபிவிருத்தி மற்றும் மலையக கலைஞர்கள், எழுத்தாளர்களுக்கான சமூகநலத்திட்டங்கள் என்பனவற்றையும் இந்திய அரசு மலையகம் -200 நிறைவையொட்டி அவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்படவேண்டிய விருதுகள், சன்மானங்கள் உள்ளடக்கிய மகஜர் ஒன்றையும் கையளித்தார்.

# திருப்பணிநாயகன் அழகுசேர்வை காலமானார்



மாத்தளை சுதுகங்கை அருள்மிகு ஏழுமுகக் காளியம்மன் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவர் வேலாயுதம் அழகுசேர்வை கடந்த 15ஆம் திகதி காலமானார்.

இவர் தமிழ்நாடு சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த காளியார் கோயிலை பிறப்பிடமாகக் கொண்டவர். ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களான பெரியமருது, சின்னமருது ஆகியோரின் வழிவந்தவராவார்.

இன்று தேவஸ்தான அந்தஸ்துக்கு உயர்வடைந்து சுதுகங்கை அருள்மிகு ஸ்ரீ ஏழுமுகக் காளியம்மன் ஆலயத்துக்குப் பெருந்தொண்டாற்றியவர். திருப்பணிநாயகன், காளிகாமாதேவி காவலன்| ஆகிய சிறப்புப் பெயர்களைப் பெற்று பாராட்டப்பட்டவர். ஆலய பரிபாலன சபையின் தற்போதைய உப தலைவர் அழ. சந்திரபோஸ் அவர்களின் தந்தையாராவார்.

அழகுசேர்வையின் பதவிக் காலத்திலேயே ஆலய அபிவிருத்திக்கான காணி நிலம் கையகப்படுத்தப்பட்டது. தென்மேற்கு இராஜகோபுரம், அறநெறிக் கல்வி, கல்யாண மண்டபம் என்பன நிர்மாணிக்கப்பட்டன.

இவரது மறைவையொட்டி ஊடகவியலாளரும் பிரசுரகர்த்தாவுமாகிய எச்.எச்.விக்கிரமசிங்க, கலாசார அதிகாரி, கலாசார அமைச்சு (ஓய்வுநிலை) கலைமாமணி மாத்தளை வே.வடிவேலன் ஆகியோர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் அழகுசேர்வையின் மறைவு மாத்தளை இந்துக்களுக்கு மட்டுமல்ல, ஏழ்மை நிலையில் திகழ்ந்த இந்து ஆலயங்களை உயர்வடைய அயராது உழைக்கும் தொண்டர்களுக்கும் பேரிழப்பாகும்.

இவரது ஆடம்பரமற்ற- எளிமையான சமயப் பணி அனைவரும் பின்பற்றதக்கதாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கண்டி விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் கணினி பயிற்சிக்கூடத் திறப்பு விழா



கண்டி விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்துக்கு கண்டி கொமர்ஷல் வங்கியினால் கணினி பயிற்சிக்கூடமொன்று அமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. வித்தியாலய அதிபர் செல்வி கலையரசி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கண்டி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.ஐ. அந்தரகே, கௌரவ விருந்தினர்களாக கொமர்ஷல் வங்கி பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் சனித் ஜயசுந்தர, கங்கவட்ட கோரளை கல்விப் பணிப்பாளர் திருமதி என்.அபேவர்தன, கண்டி மாவட்ட சிறுகைத்தொழில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் கல்வியாளர்கள் கௌரவிப்பு, சுவாமி விவேகானந்தர் சிலை திறப்பு நிகழ்வு மற்றும் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

(கண்டி - இரா.அ. இராமன்)

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

# கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்



(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட ஆரையம்பதி, காங்கேயனோடை கிராமங்களிலும் டெங்கு நோயாளர்கள் அதிகரித்துள்ள பல பகுதிகளிலும் பிரதேச சபை அலுவலகத்திலும் செவ்வாய்க்கிழமை(16) டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மண்முனைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் யோ.சர்வேஸ்வரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இவ் வேலைத்திட்டத்தில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



(பாண்டிருப்பு செய்தியாளர்)

பட்டிருப்பு வலயக் கல்வி பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரனின் வழிகாட்டலில் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்பார்வையில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் செவ்வாய்க்கிழமை(16) இடம்பெற்றது. இதற்கமைய கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலய அதிபர் க.செல்வராசா தலைமையில் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் ரி. கஜானனின் வழிகாட்டலில் மாணவர்களுக்கு டெங்கு நுளம்பு தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள், ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதன்போது பாடசாலை சுற்றுப்புறச் சூழல் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



(பாறுக் ஷிஹான்)

தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட அஸ்-ஸுஹரா வித்தியாலய வளாகத்தில் அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா தலைமையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது பிரதி அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிந்தவூர் அல் - மதீனா மகா வித்தியாலயத்திலும் அதிபர் எம்.எல்.எம். நிஹாறுடீன் தலைமையில் இதேபோன்ற மாபெரும் சிரமதான நிகழ்வு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

கல்வியமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க, நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டமொன்று நாடு தழுவிய ரீதியில் பாடசாலைகளில் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதனையொட்டி, செவ்வாய்க்கிழமை(16) கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் மாணவர்கள் சுற்றுப்புறச்சூழலை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.



(காரைதீவு செய்தியாளர்)

தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்துக்கு அமைவாக, காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலின் கீழ் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தலைமையில் கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையில் செவ்வாய்க்கிழமை(16) டெங்கு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

பாடசாலை அதிபர் இ.ரகுபதி தலைமையில் ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நூலக உதவியாளர் மற்றும் மாணவிகள் ஆகியோர் பாடசாலை வளாகங்களை துப்புரவு செய்தனர்.



(சீனக்குடா செய்தியாளர்)

டெங்கு கட்டுப்பாட்டு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய மாணவர்களால் செவ்வாய்க்கிழமை(16) சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது விழிப்புணர்வு ஊர்வலமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதிபர் எம்.எஸ்.அகமட்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாடசாலை உள்ளக வெளியக சூழல் துப்புரவு செய்யப்பட்டதுடன், டெங்கு நுளம்பின் ஆபத்து குறித்து பொது மக்களுக்கு விழிப்பூட்டும் வீதி விழிப்புணர்வு ஊர்வலமும் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



(அட்டாளைச்சேனை செய்தியாளர்)

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத்திட்டம் பாடசாலை அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் செவ்வாய்க்கிழமை(16) இடம்பெற்றது.

அக்கரைப்பற்று கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அம்ஜத்கான் மற்றும் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்ற இவ்சிரமதானப் பணியில் அக்கரைப்பற்று கல்வி வலய உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாராப் பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



(கிண்ணியா செய்தியாளர்)

டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் செவ்வாய்க்கிழமை(16) முன்னெடுக்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் சக உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை, மற்றுமொரு நிகழ்வு தம்பலகாமம் பிரதேச சபை, தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இணைந்து முள்ளிப்பொத்தானையில் வீட்டுக்கு வீடு டெங்கு ஒழிப்புப் பணி இடம்பெற்றது. டெங்கு பரவும் இடங்கள் பரிசோதிக்கப்பட்டு நுளம்பு குடம்பிகள் பரவாத வண்ணம் சூழலை சுத்தமாக வைத்திருப்பது பற்றி மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டதுடன் பிரதேச சபை ஊழியர்கள், பொலிஸார், இராணுவத்தினர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



(கல்லடி செய்தியாளர்)

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியத்தின் விசேட பணிப்புரைக்கமைய மட்டக்களப்பு கல்வி வலய நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தேவரஜனி உதயாகரனின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை(16) டெங்கு ஒழிப்புச் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. அதிபர் பி.தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானத்தில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பங்கேற்றனர். இதன்போது டெங்கு பரவுவதற்கான இடங்கள் துப்புரவு செய்யப்பட்டதோடு, சிரட்டைகள், போத்தல்கள் வேறாக்கப்பட்டு மாநகரசபை துப்புரவுப் பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



(கோணாவத்தை செய்தியாளர்)

சம்மாந்துறை சபூர் வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு அதிபர் எம்.பீ.எம்.சாபீர் தலைமையில் செவ்வாய்க்கிழமை(16) நடைபெற்றது. இதன்போது பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் சிரமதானத்தில் கலந்துகொண்டிருந்தனர்.



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சம்மாந்துறை பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் செவ்வாய்க்கிழமை (16) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சுற்றுச்சூழலிலுள்ள டயர்கள், யோகட் கப்கள், சிரட்டைகள், மட்டைகள், பிளாஸ்டிக் கொள்கலங்கள் சேகரிக்கப்பட்டதுடன் நீர்த்தேங்கியுள்ள இடங்கள், வடிகான்களும் துப்புரவு செய்யப்பட்டன. சம்மாந்துறை பிரதேச சபையினால் சம்மாந்துறை மத்திய, கிழக்கு, மேற்கு ஆகிய வலயங்களாக பிரிக்கப்பட்டு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

கல்முனை மாநர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு பரவுவதை கட்டுப்படுத்தும் முகமாக திண்மக்கழிவகற்றல் வேலைத்திட்டம் கல்முனை பொதுச்சந்தை, நகரசபை அலுவலகம், உள்ளூர் வீதிகள் ஆகிய இடங்களில் முன்னெடுக்கப்பட்டன.




(காத்தான்குடி செய்தியாளர்)

காத்தான்குடி நகர சபையினால் முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நிகழ்வு செவ்வாய்க்கிழமை (16) காத்தான்குடி மத்திய வீதி கிரசன்ட் அகடமி முன்பாக ஏற்பாடு செய்திருந்தது. நகர சபை செயலாளர் திருமதி றிப்கா ஷபீன் தலைமையில் இடம்பெற்ற சிரமதான நிகழ்வில் காத்தான்குடி மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் மீரா முகைதீன், நகர சபையின் கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், வருமானப் பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் கலந்துகொண்டனர்.




அக்கரைப்பற்று வலயமட்ட வரலாறு கண்காட்சியின் முன்னோடியாக 'வரலாறு வாழ்வோடு இணைந்ததாக' எனும் தொனிப்பொருளில் வலய மட்ட முதலாவது கண்காட்சிக்கூடம் திங்கட்கிழமை(15) பாலமுனை அல்-ஹிதாயா மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இதன்போது அதிதிகள் உட்பட பாடசாலை உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (பாலமுனை செய்தியாளர்)

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழுங்கல்



(வாழைச்சேனை செய்தியாளர்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வாழைச்சேனை பிரதான வீதியின் பஸ் தரிப்பு நிலையத்தில் புதன்கிழமை(17) நடைபெற்றது.

பிரதேச இளைஞர்களுடன் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கு.குணசேகரம் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட இணைப்பாளர் த.சுரேஸ் ஆகியோர் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது வீதியில் பயணிப்போர் மற்றும் பஸ் தரிப்பு நிலையத்தில் தரித்து நின்றோர் என பலருக்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

த
கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# இந்தியாவிலிருந்து சுற்றுலா வந்த இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

இந்தியா தமிழ்நாட்டிலிருந்து திருகோணமலைக்கு சுற்றுலா வந்த இளைஞரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை - அலஸ்தோட்டம் பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்த அவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த நண்பர்களுடன் கடலுக்கு நீராடச் சென்றபோது நீரில் மூழ்கியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைமூலம் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, குறித்த இளைஞர் நீரில் மூழ்கிய நிலையில் செவ்வாய்க்கிழமை(16) திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் புதன்கிழமை(17) காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தமிழ்நாடு - திருநெல்வேலியில் வசித்து வரும் கஸ்தூரி ரங்கன் ஜெயசூர்ய (26வயது) என்பவராவார். சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சட்ட வைத்திய பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், குறித்த இளைஞரின் உறவினர்கள் திருகோணமலைக்கு வருகை தந்துள்ள நிலையில் சடலத்தை தமிழ்நாட்டுக்கு கொண்டு செல்வதற்குரிய ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். மேலும் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி பரிமாறும் நிகழ்வு திருகோணமலை சல்லி கிராமத்தில் செவ்வாய்க்கிழமை(16) இடம் பெற்றது. இதன்போது பாதிக்கப்பட்ட மக்கள் உட்பட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு தங்கள் துக்கத்தை பகிர்ந்து கொண்டிருந்தனர். (கந்தளாய் செய்தியாளர்)

## போடியார் புலம்பல்!



ஜனாதிபதி தேர்தல நடத்த சட்டத்திருத்தம் கொண்டுவந்து ரணிலுக்கு அதிகாரத்த வழங்கப்போறாங்களாம் எண்டு ஒரு கத அடிபடுது எலுவா? ஏற்கனவே உள்ளூராட்சிசப தேர்தல நடத்தாமல் தடுத்து வைச்சிருக்கிறதுக்கு ஆருட்டக்கேட்டு இத நிற்பாட்டி இருக்கயல் மோட்டுப்பயல்களே ஒவ்வொரு தேர்தலுக்கும் ஒவ்வொரு விதமான கத கதைச்சு காலத்த இழுத்தடிக்கிற விளையாட்டுத்தான் இது!

# கிழக்கு ஆளுநர் செந்திலுக்கு ரவூப் ஹக்கீம் வாழ்த்து

(திகாமடுல்ல, மாவடிப்பள்ளி, வெல்லாவெளி செய்தியாளர்கள்)



கிழக்கு மாகாண புதிய ஆளுநராக புதன்கிழமை(17) பதவியேற்றுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தொலைபேசி மூலம் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்காலத்தில் தீர்க்கமான முடிவுகளை எட்டுவதற்கு இருவரும் இணைந்து செயற்படுவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், கிழக்கு மாகாணத்திலுள்ள கட்சி பிரதிநிதிகள் சகிதம் விரைவில் ஆளுநருடன் சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் ரவூப் ஹக்கீம் இதன்போது தெரிவித்துள்ளார்.

# இளவயது திருமணம், விவாகரத்து தொடர்பிலான கலந்துரையாடல்



(கிண்ணியா செய்தியாளர்)

தம்பலகாமம் பிரதேச செயலக ஏற்பாட்டில் இளவயது திருமணம் மற்றும் விவாகரத்து, போதைப்பொருள் பாவனை ஒழிப்பு தொடர்பாக பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு முள்ளிப்பொத்தானை அல்-அக்ஸா ஜும்ஆப் பள்ளிவாசலில் செவ்வாய்க்கிழமை(16) நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க, இடம்பெற்ற இந்நிகழ்வில், இளவயது திருமணம் தொடர்பிலான சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இதில் காதி நீதிபதி, தம்பலகாமம் பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் அஸ்வர், சமுதாயம்சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹம்சபாலன், முஸ்லிம் சமய கலாசார உத்தியோகத்தர் பஸ்மி, தம்பலகாமம் பிரதேச ஜம்இய்யதுல் உலமா சபை பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# போதைப்பொருள் பாவனை ஒழிப்பு தொடர்பில் பெண்களுக்கு அறிவூட்டல்

(மாளிகைக்காடு செய்தியாளர்)

சர்வதேச மகளிர் தினத்துடன் இணைந்ததாக போதைப்பொருள் பாவனை ஒழிப்பு எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது பெண்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக்கின் அறிவுறுத்தலுக்கமைவாக, சாய்ந்தமருது சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவின் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் ஏற்பாட்டில் சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீமின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் சாய்ந்தமருது சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் றியாத் ஏ.மஜீத், பிரிவுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நூருல் றிபா கலந்து கொண்டதுடன் வளவாளராக கல்முனை பிராந்திய பாலியல் ஆரோக்கியம் மற்றும் பாலியல் தொற்று நோய்கள் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.என்.முஹம்மது தில்ஷான் கலந்து கொண்டு போதைப்பொருள் பாவனையால் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக உரையாற்றினார்.

இந்நிகழ்வில் சமூக மட்ட அமைப்புகளின் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன் மற்றுமொரு அங்கமாக சாய்ந்தமருது - 03, 05ஆம் பிரிவு பெண்களுக்கான அறிவூட்டல் நிகழ்வு சாய்ந்தமருது அல்-கமரூன் வித்தியாலய கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன், பிரிவுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.நபார் ஆகியோர் கலந்து கொண்டதுடன் வளவாளராக கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் என்.எம்.நௌசாத் கலந்து கொண்டு போதைப் பாவனையினால் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக தெளிவுபடுத்தினார்.

# கல்முனை பிரதேச செயலகத்தில் பொதுமக்கள் நடமாடும் சேவை



(நாவிதன்வெளி செய்தியாளர்)

கல்முனை பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொது மக்கள் நடமாடும் சேவை புதன்கிழமை(17) பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் இடம்பெற்றது.

இந்நடமாடும் சேவையில் காணி, சமூக சேவைகள், சமுர்த்தி, மோட்டார் போக்குவரத்து, திட்டமிடல், கலாசாரம், மகளிர் அபிவிருத்தி, தேசிய அடையாள அட்டை, பொலிஸ், தேசிய வீடமைப்பு அதிகார சபை, பதிவாளர் திணைக்களம் ஆகிய பிரிவுகள் கலந்து கொண்டு பொது மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வுகள் வழங்கப்பட்டன.

அத்துடன், முதியோர் அட்டைகளும் சிலருக்கு வழங்கப்பட்டதுடன் அங்கவீனமுற்ற நபர் ஒருவருக்கு சக்கர நாற்காலியும் இயலாமை நிலையிலுள்ள முதியோர்களுக்கு ஊன்றுகோலும் மற்றும் மருதமுனை வீட்டுத்திட்டத்தில் எஞ்சியுள்ள வீடுகளை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை என்பன நடைபெற்றன.

இதில் கல்முனை பிரதேசத்திலுள்ள பொது மக்கள் பலரும் கலந்து கொண்டு தங்களது தீர்க்கப்படாத நீண்ட கால பிரச்சினைகளை முன் வைத்து தீர்வுகளைப் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக கணக்காளர் யூ.எல்.ஜவாஹிர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், கல்முனை, பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலீஹ், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எச்.ஜனூபா, பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் உட்பட கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் 650 மில்லி கிராம் கஞ்சாவுடன் புதன்கிழமை(17) ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தேக நபர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்கு சென்று சந்தேக நபரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




அம்பாறை மாவட்ட தமிழ் சிவில் அமைப்புகளின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு புதன்கிழமை(17) பாண்டிருப்பில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் தர்சினி, போராளிகள் குடும்ப உறவுகள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது மாவீரர் பெற்றோரினால் முள்ளிவாய்க்கால் நினைவுப் பொதுச் சுடரேற்றப்பட்டதுடன், மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டு, முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. (வாழைச்சேனை செய்தியாளர்)

# ஊடக தர்மத்தை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் நிறைவு நாள் நிகழ்வு




(கல்லடி செய்தியாளர்)

''இளைஞர், யுவதிகள் மத்தியில் ஊடக தர்மத்தினை வலுப்படுத்துவதன் ஊடாக வன்முறை, தீவிரவாதத்தை தடுத்தல்'' எனும் தொனிப்பொருளில் 900 இளைஞர் யுவதிகள் மற்றும் மாணவர்களை நெறிப்படுத்தும் திட்டம் லிப்ற் மனிதாபிமான தொண்டு நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் குறித்த திட்டத்தின் நிறைவு நாள் நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை(16) இடம்பெற்றது.

லிப்ற் மனிதாபிமான தொண்டு நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி ஜானு முரளிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஆ.நவேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சிசிகலா புண்ணிய மூர்த்தி, மாவட்ட தகவல் அதிகாரி வி.ஜிவானந்தன், ஹெல்விட்டாஸ் நிறுவன முகாமையாளர் ஹசாந்தி, திட்ட உத்தியோகத்தர் ரமேஸ், பிரதேச செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், தொழில்நுட்ப கல்லூரிகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், குறித்த திட்டத்தின் பயிற்சி செயலமர்வுகளின் வளவாளர்களாக பயிற்றுவிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள், லிப்ற் நிறுவனத்தின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய பிரதேச செயலாளர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட தொழில்நுட்பக் கல்லூரியின் அதிகாரிகளுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், மாவட்ட தகவல் திணைக்கள பொறுப்பதிகாரி வி.ஜீவானந்தனின் சேவையினை பாராட்டி ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரீஸ் உள்ளிட்ட மாவட்ட ஊடகவியலாளர்களினால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

குறித்த செயற்றிட்டத்தினை ஜீசெப் மற்றும் ஹெல்விடாஸ் நிறுவனங்களின் நிதி அனுசரணையில், லிப்ற் மனிதாபிமான தொண்டு நிறுவனம் மாவட்ட ஊடகப்பிரிவின் பூரண அனுசரணையுடன் திறம்பட நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி பரிமாறும் நிகழ்வு வெருகலில் புதன்கிழமை(17) இடம்பெற்றது. (கந்தளாய் செய்தியாளர்)





கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனையில் இயங்கிவரும் விசேட தேவையுடையோர் பாடசாலைக்கு செவ்வாய்க்கிழமை (16) ஒரு தொகுதி கதிரைகள் வாழைச்சேனை அந்-நூர் தேசிய பாடசாலையின் 2004 க.பொ.த. சாதாரண தர பழைய மாணவர் ஒன்றியத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. விசேட தேவையுடையோர் பாடசாலையின் முகாமையாளர் ஏ.ஜீ.பிர்தௌஸ் வேண்டிக் கொண்டதற்கமைய, கதிரைகளை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வில் பழைய மாணவர் அமைப்பின் தலைவர் எம்.எஸ்.ஏ.பரூஸுர், உப தலைவர் வை.பி.சியான், நிர்வாக உறுப்பினர்களான எம்.எஸ்.கலீல் ரஹ்மான், ஏ.எச்.கலீம் ஆகியோர் கலந்து கொண்டனர். (மீராவோடை செய்தியாளர்)



பாலமுனை சஹ்வா அறபுக் கல்லூரி பணிப்பாளர் சபையின் வேண்டுகோளுக்கிணங்க, தார் இப்னு மஸ்ஹூத் மத்ரசா மாணவர்களின் நிதிப் பங்களிப்புடன் பாலமுனை அல்-ஹிக்மா வித்தியாலயத்துக்கு ஒரு தொகை தளபாடங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இதன்போது பாடசாலை அதிபர் ஏ.எல்.எம்.பாயிஸிடம் தார் இப்னு மஸ்ஹூத் மத்ரசா மாணவன் தளபாடங்களை கையளித்தார். இந்நிகழ்வில், பிரதி அதிபர் ஐ.எம்.பாஹிம், உதவி அதிபர் அலி அஸ்ரப், சஹ்வா அறபுக் கல்லூரி அதிபர் அஷ்-ஷெய்க் ஏ.ஆர்.றமீன் (மதனி), பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் எஸ்.எச்.தம்ஜீத், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (பொத்துவில் செய்தியாளர்)

# கர்நாடகா முதலமைச்சர் யார்? இன்று வெளிவருகிறது அறிவிப்பு



கர்நாடகாவில் 48 மணி நேரத்தில் புதிய அமைச்சரவை பதவியேற்கும் என காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

அத்தோடு அடுத்த 2-3 நாட்களுக்குள் கர்நாடகத்தில் எங்களுடைய அமைச்சரவை அமையும் என்று காங்கிரஸ் செய்தித்தொடர்பாளர் ரன்தீப் சுரேஜ்வாலா தெரிவித்தார்.

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்துள்ள நிலையில், முன்னாள் முதலமைச்சர் சித்தராமையாவுக்கும் காங்கிரஸ் மாநிலத் தலைவர் டி.கே.சிவக்குமாருக்குமிடையே முதலமைச்சுப் பதவிக்கான போட்டி நிலவுகிறது.

முதலமைச்சுப் பதவியை யாருக்கு வழங்குவது என்பது குறித்து காங்கிரஸ் தலைமை தொடர்ந்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறது.

சித்தராமையாவும் டி.கே.சிவகுமாரும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை டில்லியில் சந்தித்துப் பேசிய நிலையில் நேற்று ராகுல் காந்தியுடன் சந்திப்பு மேற்கொண்டுள்ளனர். எனவே, கர்நாடக முதலமைச்சர் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இதுகுறித்து காங்கிரஸ் செய்தித்தொடர்பாளர் ரன்தீப் சுரேஜ்வாலா தெரிவிக்கையில்,

தற்போது கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அதுகுறித்து ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். இன்று முதலமைச்சர் குறித்த அறிவிப்பு வெளியாகிவிடும். அடுத்த 48-72 மணி நேரத்தில் கர்நாடகாவில் புதிய அமைச்சரவை அமையும் - எனத் தெரிவித்துள்ளார்.

# கர்நாடகாவில் காங்கிரஸ் வெற்றிக்குப் பின்னால் 'தமிழன்'



கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது. இந்தத் தேர்தல் வெற்றிக்குப் பின்னால் நிச்சயமாக பல்வேறு அரசியல் வியூகங்கள் இருக்கும். ஆனால், இந்தப் பிரம்மாண்ட வெற்றிக்குப் பின்னால் ஓர் ஓய்வு பெற்ற அதிகாரியின் மூளையும் இருக்கிறது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஊடகங்களில் காங்கிரஸ் வெற்றியோடு சேர்த்து ஓர் அடைமொழி போல் கூறப்படுகிறது 'சசிகாந்த் செந்தில்' என்ற ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியின் பெயர்.

இந்நிலையில், தமிழக காங்கிரஸின் புதிய தலைவர் பதவிக்கான போட்டியில் எம்.பிக்கள் ஜோதிமணி, டாக்டர் செல்லகுமார், முன்னாள் எம்.பி. விஸ்வநாதன் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர். இவர்களுடன் தற்போது, கர்நாடக மாநில முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியும் தமிழக காங்கிரஸ் சமூக வலைத்தளப் பிரிவு ஒருங்கிணைப்பாளருமான சசிகாந்த் செந்திலும் சேர்ந்துள்ளார்.

கர்நாடக சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றிக்கு சசிகாந்த் செந்தில் தலைமையிலான வார்ரூம் முக்கிய பங்கு வகித்துள்ளது. தேர்தல் அறிக்கையில் எந்த மாதிரியான அறிவிப்புகளை வெளியிட்டால் அது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை தரும் என்பதை மேலிடத்திற்கு அறிக்கையாக சமர்ப்பித்தார். அதை பரிசீலித்த காங்கிரஸ் மூத்த தலைவர்கள் தேர்தல் அறிக்கையை இறுதி செய்து வெற்றி பெற்றனர்.

அதேபோல், தமிழக மக்களின் பிரச்சினைகளை அறிந்து தீர்வு வகுக்க வேண்டும் தொண்டர்களின் தேவைகளை அறிந்து கட்சி வளர்க்க வேண்டும். அதற்கான உத்தியும் - ஆழமான புரிதலும் கொண்டவராக சசிகாந்த் செந்தில் இருப்பதாக காங்கிரஸ் மேலிடம் கருதுவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**யார் இந்த சசிகாந்த் ஐ.ஏ.எஸ்.?**

சசிகாந்த் செந்தில் கர்நாடக கேடர் ஐ.ஏ.எஸ். அதிகாரி. தன் பணிக்காலத்தில் அவர் கர்நாடக மாநிலத்தில் சித்ரதுர்கா, ராய்ச்சூர் மாவட்டங்களில் ஆட்சியராகப் பணியாற்றியுள்ளார். பல்வேறு துறைகளிலும் பணியாற்றியுள்ளார். அதனால் அவருக்கு கர்நாடக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், தேவைகள் என்னவென்பது குறித்த ஆழமான- தெளிவான புரிதல் இருந்துள்ளது.

சசிகாந்த் செந்தில் 2019 செப்டெம்பரில் தனது பணியை இராஜிநாமா செய்தார். 'தேசத்தை கட்டமைக்கும் அடிப்படை அமைப்புகள் சிதைக்கப்படுகின்றன. அவற்றைக் காப்பாற்ற வேண்டும்' என்று கூறியே அவர் தனது பணியை இராஜிநாமா செய்தார்.

அதன் பின்னர் தமிழக காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சமூகவலைத்தளப் பிரிவு ஒருங்கிணைப்பாளராகவும் இருந்தார். கர்நாடகத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரியும் தமிழக பா.ஜ.க. தலைவரும் அண்ணாமலை பா.ஜ.க. சார்பில் தேர்தல் பணிக்காக அனுப்பப்பட்ட அதேவேளை, காங்கிரஸ் சார்பில் களமிறக்கப்பட்டது சசிகாந்த் செந்திலே.

கட்சியின் கட்டளையை ஏற்று கர்நாடக தேர்தலில் காங்கிரஸ் வெற்றிக்கான பணியை கையில் எடுத்தார். அதை இப்போது திறம்பட முடித்துள்ளார்.

அதுமட்டுமல்ல, பல்வேறு தருணங்களிலும் கர்நாடக மாநிலத்தில் பா.ஜ.கவின் நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்துள்ளார். ஹிஜாப் தடை விவகாரம், ஊழல் விவகாரம், முஸ்லிம்களுக்கான 4 சதவீத உள் ஒதுக்கீடு ரத்து விவகாரம் என பல்வேறு முக்கிய பிரச்சினைகள் குறித்தும் தனது சமூக வலைத்தள பக்கத்தில் விரிவாக விமர்சித்து வந்துள்ளார். அவை அனைத்துமே அதிக கவனம் பெற்றவையாக உள்ளன.

## உலக செய்திகள்

# வெப்பத்தில் தவிக்கும் தமிழகம்



தமிழகத்தில் 19 இடங்களில் வெப்பநிலை 100 டிகிரி பரன்ஹீட்டை கடந்துள்ளது.

கடந்த சில நாட்களாக வாட்டி வதைத்து வரும் அக்னி நட்சத்திர வெயிலின் தாக்கம் நேற்றும் நீடித்தது. சென்னை புறநகரில் அதிகபட்சமாக 108.86 டிகிரி பரன்ஹீட்டும் அதற்கு அடுத்தபடியாக வேலூரில் 107.96 டிகிரி பரன்ஹீட்டுமாக வெப்பநிலை பதிவாகியுள்ளது. இவ்வாறு தமிழகத்தின் 19 இடங்களில் வெப்பநிலை 100 டிகிரி பரன்ஹீட்டை கடந்துள்ளது.

இதேநிலை தொடருமென்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

# சூடான் இராணுவ மோதல்: ஆயிரத்தைக் கடந்தது பலி



சூடான் இராணுவத்துக்கும் துணை இராணுவத்துக்குமிடையே நடைபெற்றுவரும் மோதல் ஒரு மாதம் கடந்தும் தொடரும் நிலையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மோதலில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

சூடானில் அப்தெல் ஃபட்டா அல்-புர்ஹான் தலைமையிலான இராணுவத்துக்கும், முகமது ஹம்தான் டகாலோ தலைமையிலான ஆர்.எஸ்.எஃப். துணை இராணுவப் படைக்குமிடையே கடந்த மாதம் 15ஆம் திகதி முதல் மோதல் இடம்பெற்று வருகிறது.

அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியா மேற்கொண்ட இராஜதந்திர ரீதியிலான முயற்சிகளுக்குப் பின்னர் இரு தரப்பினருக்குமிடையே அமைதிப் பேச்சு சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரில் நடைபெற்று வருகிறது.

இருந்தாலும், இரு தரப்பினருக்குமிடையே தலைநகர் கார்ட்டூம் உள்ளிட்ட பகுதிகளில் மோதல் தொடர்ந்து வருகிறது. இந்நிலையில், மோதலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

# இந்திய கடலில் சீன கப்பல் கவிழ்ந்து 39 பேர் மாயம்



சீனாவிலிருந்து 39 பேருடன் வந்த மீன்பிடிக் கப்பலொன்று இந்தியப் பெருங்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில், குறித்த சீன மீன்பிடிக் கப்பலிலிருந்த 39 பேரும் கடலில் மூழ்கி மாயமான நிலையில் அவர்களைத் தேடும் பணி தீவிரமடைந்துள்ளது.



**புத்தளம் மாவட்டத்தில் உள்ள 16 அணிகள் பங்குகொண்ட கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி ஆண்டிமுனை, சின்னக்கொலனி மைதானத்தில் இடம்பெற்றது. ஆண்டிமுனை உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இரவு பகலாக நடைபெற்ற இப்போட்டியில் புளுதிவயல் அல்பலா அணி முதலாம் இடத்தையும் ஆண்டிமுனை உதயசூரியன் அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. பரிசில்களை திரு.கே.சிவராஜ், திரு.பூ.கேதுஜன் ஆகியோர் வழங்கி வைத்தனர். (படம் - உடப்பு செய்தியாளர்)**

# 20 ஆவது ஆசிய இளையோர் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்

## இலங்கையிலிருந்து 8 வீர - வீராங்கனைகள்

ஜூன் மாதம் 4 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை தென்கொரியாவில் நடைபெறவுள்ள 20 ஆவது ஆசிய இளையோர் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 8 வீர வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

45 ஆசிய நாடுகளைச் சேர்ந்த 1,500 வீர வீராங்கனைகள் இப்போட்டியில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை குழாமில் 4 வீரர்கள்- 4 வீராங்கனைகள் மற்றும் 3 அதிகாரிகள் என 11 பேர் தென் கொரியா நோக்கிப் பயணமாகவுள்ளனர்.

ஆசிய இளையோர் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் 1986 முதல் 2018 வரை இலங்கை 30 பதக்கங்களை வென்றுள்ளது. இதில் 7 தங்கம், 14 வெள்ளி, 9 வெண்கலம் என அடங்குகின்றன.

TATA IPL

**இன்றைய போட்டி**

போட்டி இல - 65

ஹைதராபாத் எதிர் பெங்களூர்

நேரம் - இரவு 7.30

இடம் - ஹைதராபாத்

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# 10 ஆண்டுகளின் பின் தரம்சாலாவில் ஐ.பி.எல். ஆட்டம்

நடப்பு இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் பஞ்சாப் கிங்ஸ் - டெல்லி கெப்பிடல்ஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டம் நேற்று இரவு தரம்சாலாவில் நடைபெற்றது. இதன் மூலம் 10 ஆண்டுகளின் பின் 19,000 பார்வையாளர்களைக் கொண்ட தரம்சாலா சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் போட்டி நடைபெற்றது.

இந்த சீசனின் 64 ஆவது மற்றும் 66ஆவது ஐ.பி.எல். போட்டிகளைக் காண மைதானம் தயாராக உள்ளது. தரையைச் சுற்றி ஹார்டிங் மற்றும் எல்.இ.டிகள் நிறுவப்பட்டுள்ளன.

கடைசியாக 2013ஆம் ஆண்டு இங்கு ஐ.பி.எல். போட்டிகள் நடந்தன. மைதானம் தொடர்பாக இமாச்சல பிரதேச கிரிக்கெட் கவுன்சில், மாநில அரசு இடையே சட்டப்போராட்டம் நடந்து வந்ததால் இங்கு போட்டிகள் நடைபெறாமல் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவில் சம்பியன் கிண்ணம் ரொக் சலஞ்சர்ஸ் அணி வசம்

**(பொத்துவில் நிருபர்)**




பொத்துவில் பசறிச்சேனை நண்பர்கள் வட்டத்தினால் நடத்தப்பட்ட பொத்துவில் சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பொத்துவில் ரொக் சலஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை தன்வசம் சுவீகரித்துக்கொண்டது.

பசறிச்சேனை நண்பர்கள் வட்டத்தினால் நடத்தப்பட்ட மேற்குறித்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் பசறிச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியின்போது பொத்துவில் ரொக் சலஞ்சர்ஸ் மற்றும் தாண்டியடி சூப்பர் ஹிட் ஆகிய அணிகள் மோதிக்கொண்டன.

இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக ரொக் சலஞ்சர்ஸ் அணியின் அம்ஜத் சுற்றுத் தொடரின் சிறப்பாட்டக்காரராக அந்த அணியின் தலைவர் முஹாஸ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற ரொக் சலஞ்சர்ஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணம் மற்றும் பணப்பரிசு என்பன அதிதிகளினால் வழங்கிவைக்கப்பட்டது.

# பதிவுகள் ஆரம்பம்

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள 2023 லங்கா ப்ரீமியர் லீக் தொடரில் பங்கெடுக்கும் வெளிநாட்டு வீரர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளன.

வெளிநாட்டு வீரர்கள் LPL Player Registration Portal – Sri Lanka Cricket எனும் இணைய இணைப்பினூடாக தங்களை பதிவு செய்துகொள்ள முடியும்.

இந்த இணைப்பின் மூலமாக பதிவு செய்யக்கூடிய வீரர்கள் சில நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளது. ஜூலை மாதம் 30ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 20ஆம் திகதி வரை போட்டிகள் நடைபெறவுள்ளன. இலங்கை அணியின் முன்னாள் வீரர்களும் மேற்குறிப்பிட்ட இணைய இணைப்பின் மூலமாக தம்மைப் பதிவு செய்துகொள்ள முடியும்.

# வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த நாவிதன்வெளி பிரதேச செயலகம்



**(பாண்டிருப்பு நிருபர்)**

கல்முனை பிராந்தியத்திலுள்ள விஷேட தேவையுள்ள - விஷேட கல்வி அலகு மாணவர்கள் உட்பட டெப்லிங் நிறுவனம் பணியாற்றுகின்ற பிரதேச செயலகங்களான கல்முனை வடக்கு, காரைதீவு, நாவிதன்வெளி போன்ற அணிகளுடன் திருச்சபையின் அணிகள் உள்ளடங்கிய கிரிக்கெட் சுற்றுப்போட்டி கல்முனை உவெஸ்லி உயர்தர கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய டெப்லிங் இணைப்பாளர் ரி.ராஜாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போட்டியில் 8 அணிகள் பங்குபற்றியதுடன் வெற்றிக் கிண்ணத்தை நாவிதன்வெளி பிரதேச செயலகம் சுவீகரித்தது. 2ஆம் இடத்தை கல்முனை மெதடிஸ்த திருச்சபை பெற்றுக்கொண்டது. 3ஆம் இடத்தை கல்முனை உவெஸ்லி விசேட அலகு மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் அதிதிகளாக கல்முனை மெதடிஸ்த திருச்சபை முகாமைக்குரு அருட்திரு ரவி முருகுப்பிள்ளை கலந்து கொண்டார். சிறப்பு அதிதியாக அருட்திரு எஸ்.எஸ். ரெரன்ஸ், கொள்ளுப்பிட்டி மருதானை குரு, இலங்கை மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

# தனது ஆட்டத்தை தந்தைக்கு அர்ப்பணித்த மொஹ்சின் கான்



லக்னோ அணியின் நேற்றைய வெற்றியில் முக்கிய பங்காற்றிய இளம் வேகப்பந்துவீச்சாளர் மொஹ்சின் கான் தனது தந்தை கடந்த பத்து நாட்களாக தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார் எனத் தெரிவித்துள்ளதுடன் தனது சிறந்த ஆட்டத்தையும் தனது தந்தைக்கு அர்ப்பணித்துள்ளார்.

கடந்த வருடம் மிகச்சிறப்பாக விளையாடிய மொஹ்சின் கான் இந்த வருடம் காயங்கள் காரணமாக பாதிக்கப்பட்டதால் பல போட்டிகளைத் தவறவிட்டார். தனது இரண்டாவது போட்டியை விளையாடிய அவர் இறுதி ஓவரை சிறப்பாக வீசினார். ''தந்தைக்காகவே சிறப்பாக விளையாடினேன் அவர் நிச்சயம் எனது ஆட்டத்தைப் பார்த்திருப்பார்'' - எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7